மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்



மலர் 6 • இதழ் 2 • ஆகஸ்ட் 2021 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

## தனித்திறன்
சிறப்பிதழ்




ஐஸ்வர்யம்
தெய்வீகம்
மங்களம்
அனைத்தின்
ஆனந்த சங்கமம்
RAMRAJ
பட்டு வேட்டிகள் • சர்ட்டுகள்
Purity & Positivity
RAMRAJ
lagnaa
PURE SILK DHOTIS • SHIRTS
RAMRAJ
MUHURTH
SILK DHOTIS • SHIRTS
www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

ஒவ்வொரு மனிதரும் தனக்குள் தேடி
தன் தனித்திறன் எது என உணர்ந்து
வாழ்வில் உயரங்களைத் தொடுவதற்கு
உணர்வுபூர்வமாக வழிகாட்டும்

# தனித்திறன்

சிறப்பிதழ்

என்ற இந்த இனிய நூலை
வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.





# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் நிச்சயமாக ஒரு தனித்திறமை இருக்கும். எவ்விதமான பொருளாதார பிரதிபலனும் இல்லை என்றாலும், அந்தத் திறனைக் கையாளும்போது நமக்குள் அளவில்லாத மகிழ்ச்சி ஏற்படும். பிடித்த ஒரு திரைப்படப் பாடலை ரசித்துப் பாடும் திறன் படைத்தவர்களுக்கு, பாடுகிற அந்த நேரத்தில் கவலைகளும் கஷ்டங்களும் மறந்து போகும். எனது நண்பர் ஒருவர் நன்றாகப் பாடும் திறமை படைத்தவர். ரேடியோ மட்டுமே இருந்த காலத்தில், இப்போது போல நினைத்த நேரத்தில் நினைத்த பாடலை நாம் கேட்க முடியாது. அவர் ஒவ்வொரு திரைப்பாடலையும் தனி நோட்டு போட்டு, பல்லவி, சரணம் என எழுதி வைத்துக் கொள்வார். அதற்காக அதிக நேரம் செலவிடுவார். பின்னர் திரைப்படப் பாடல்களை அச்சிட்டு சின்னச் சின்ன புத்தகங்கள் வெளிவரும். அவற்றைத் தேடித்தேடி சேகரிப்பார். பாடல்கள் மீது அவருக்கு இருந்த தீராத ஆர்வமும், ரசித்து மெய்மறந்து அவர் ஒவ்வொரு பாடலைப் பாடும்விதமும், அவரைப் பார்த்து பொறாமை கொள்ள வைக்கும்.

பாடும் திறன் படைத்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று பலமுறை நினைத்திருக்கிறேன். அவர்கள் எல்லோரும் தொழில்முறைப் பாடகர்களைப் போல கச்சேரியில் பாடப் போவதில்லை. திரைப்பட வாய்ப்புகள் வந்து குவியாது. அது நன்றாக அவர்களுக்கும் தெரியும். அன்றாடக் கவலைகளில் மூழ்கிவிடாமல், தங்களின் ஆற்றலை மீட்டு அடுத்த நாளை உற்சாகமாகத் தொடங்க அந்தத் தனித்திறன் வரமாக அவர்களுக்கு உதவுவதைப் பார்த்திருக்கிறேன்.

மனிதர்களுக்கு தனித்திறன் எவ்வளவு அவசியம் என்பதை விளக்கும் ஒரு பிரபலமான கதை உண்டு. ஒரு கற்றறிந்த பண்டிதர், புத்தகங்களைப் படிப்பது மட்டுமே

முக்கியம் என்பவர். படிக்காத பாமரர்களைப் பார்த்தால் அவருக்கு ஏளனமாகத் தெரியும். ஒரு நாள் அவர் ஆற்றைக் கடந்து போவதற்காக ஒரு பரிசலில் ஏறினார்.

பரிசல் ஓட்டுகிறவருக்கு படிப்பறிவு இல்லை என்பதை அறிந்து, படிப்பின் அவசியத்தை உணர்த்த முடிவு செய்தார் பண்டிதர். பரிசல் ஓட்டுபவரிடம், ''நீ வேதங்கள் படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். ''அப்படின்னா என்ன சாமி?'' என்றார் அவர். ''வேதங்கள் படிக்காதவன் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? உன் வாழ்வில் நீ கால் பாகத்தை வீணடித்துவிட்டாய்'' என்றவர், ''சரி, கீதையாவது படித்தது உண்டா?'' எனக் கேட்டார். பரிசல்காரர் 'இல்லை' என்று தலையாட்டினார். ''என்னப்பா உன் வாழ்க்கை? கீதை கூடப் படிக்காமல் நீ என்ன சாதிக்கப்போகிறாய்? வாழ்வில் பாதி காலத்தை வீணடித்துவிட்டாய்'' என்று மறுபடியும் கேலி செய்தார். ''ராமாயணம், மகாபாரதம் படித்திருக்கிறாயா?'' என்று மீண்டும் கேட்ட பண்டிதரிடம், ''அதையெல்லாம் நான் கண்ணால்கூட பார்த்தது இல்லை'' என்று படகோட்டி சொன்னார். 'உன் வாழ்வில் முக்கால் பாகத்தை வீணாக்கிவிட்டாய்'' என்று கூறிய பண்டிதரிடம், ''உங்களுக்கு நீச்சல் தெரியுமா சாமி?'' என்று ஒரேயொரு கேள்வி கேட்டார் பரிசல்காரர். ''எனக்குப் படிக்கவே நேரம் இல்லை. நீச்சல் கற்றுக்கொள்ள ஏது நேரம்?'' என்று பண்டிதர் பதில் சொன்னபோது, பரிசல் நீர்ச்சுழலில் சிக்கி தள்ளாட ஆரம்பித்தது. ''நீச்சல் கற்றுக்கொள்ளாமல் இப்படி முழு வாழ்க்கையையும் வீணாக்கிவிட்டீர்களே? இந்தச் சுழலில் இருந்து தப்பி நான் நீந்திக் கரை சேர்ந்துவிடுவேன். நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று பரிசல்காரர் கேட்க, உயிர் பயத்தில் உறைந்தார் அந்தப் பண்டிதர். இப்படி அந்தக் கதை முடியும்.

வேடிக்கையாக இருந்தாலும், அர்த்தம் பொதிந்த கதை இது. சமையல், நீச்சல், வாகனம் ஓட்டுதல் போன்ற வாழ்வியல் திறன்கள் நமக்கு எப்போது வேண்டுமானாலும் கைகொடுக்கும். 'பாடப்புத்தகங்கள் தவிர மற்ற எதையும் கற்றுக்கொள்வது நேர விரயம்' என்று பல பெற்றோர்களே நினைக்கிற இந்தக் காலத்தில், தனித்திறன்களின் அவசியத்தை வலியுறுத்திக் கூற வேண்டியிருக்கிறது. பொருட்கள் வைக்கப்பட்ட ஒரு பையை கயிறு வைத்து இறுக்கமாக கட்டுவதும், அப்படிக் கட்டிய கயிறின் முடிச்சுகளை நிதானம் தவறாமல் அவிழ்ப்பதும் கூட நமது குழந்தைகளுக்கு நாம் அவசியம் சொல்லித்தர வேண்டிய வாழ்வியல் திறன் பயிற்சிதான். சிறிய முடிச்சை அவிழ்க்கப் பொறுமையில்லாமல், கத்தரிக்கோல் கொண்டு அறுத்து எறிகிற பொறுமையின்மை குணமே, முடிவெடுக்கும் தருணங்களில் பிள்ளைகளிடம் வெளிப்படுவதை பலமுறை கவனித்திருக்கிறேன்.

உறவுக்காரப் பெண் ஒருவருக்கு ஓவியம் வரைவதிலும், எம்ப்ராய்டரி போடுவதிலும், எதையும் அழகாக மாற்றிக் காட்டுவதிலும் தனித்திறமை உண்டு. குறிப்பாக வண்ணங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவருடைய ரசனைத் திறனைப் பார்த்து வியந்திருக்கிறேன். டெக்ஸ்டைல் துறையில் மாதம் லட்சக்கணக்கில் சம்பளம் கொடுத்து அதற்கென ஆட்களை நியமிப்பதுண்டு. இல்லத்தரசியாக இரண்டு குழந்தைகளின் தாயாக இருந்துகொண்டு, இப்படிப்பட்ட ரசனைத் திறனை எப்படி மேம்படுத்திக் கொள்ள முடிகிறது என ஆச்சர்யம் அடைந்திருக்கிறேன். தனக்குக் கிடைக்கிற ஓய்வு நேரத்தை சரியாகப் பயன்படுத்தி தன்னுடைய தனித்திறன்களை மேம்படுத்திக் கொள்வதாக அவர் சொன்னார். 'ஓய்வு நேரம் என்பது எதையும் செய்யாமல் சும்மா இருப்பதற்கான நேரம் அல்ல. தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளும் பயனுள்ள நேரம்' என்பதை அவர் பதில் உணர்த்தியது.

பாட்டு பாடுவதால், ஓவியம் வரைவதால், எம்ப்ராய்டரி போடுவதால் என்ன பயன்? இந்தக் கேள்வி சிலருக்கு வரலாம். நேரத்தை சரியாக செலவழிக்கக் கற்றுக்கொண்டாலே, மனம் சிதறாமல் வாழ முடியும். பிரச்னைகள் புதிதாக வராமல் தடுக்க முடியும். நமக்குப் பிடித்த தனித்திறன்களை மேம்படுத்தினால், மனதின் ஆற்றலை ஒருமுகப்படுத்த முடியும். அம்மா தன்னுடைய நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடுவதைக் கவனிக்கிற குழந்தைகளுக்கும் அதேபோல் எம்ப்ராய்டரி கற்றுக்கொள்ள ஆர்வம் வருகிறது. குழந்தைகளின் இந்த ஆர்வம் எதிர்காலத்தில் அவர்களை 'ஃபேஷன் டிசைனிங்' துறையில் வல்லவர்களாக மாற்றலாம்.

எழுத்தாளர் சுஜாதா அவர்கள் பொறியாளராக பணிபுரிந்தாலும் அவருடைய தனித்திறமையான எழுத்தாற்றலே அவரை புகழின் உச்சத்திற்குக் கொண்டு சேர்த்தது. அவரைப் போல பொறியாளர்கள் நிறைய பேர் இருந்தார்கள். ஆனால் சுஜாதா அவர்கள் போல எழுதுவதற்கு வெகுசிலரால் மட்டுமே முடிந்தது. மறைந்த பிறகும் தன் எழுத்தின் மூலம் வாசகர்கள் மனதில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

ஒருவரின் தனித்திறமை எப்போது வேண்டுமென்றாலும் விஸ்வரூபம் எடுக்கலாம். ஒவ்வொரு தனிமனிதரின் வாழ்விலும், தனித்திறன் தருகிற நன்மைகளை விளக்கும் சிறப்பிதழாக இம்மாத வெண்மை எண்ணங்கள் இதழ் மலர்கிறது. நிச்சயம் பாதுகாத்து வைக்கிற இதழாக அமையும். தனித்திறன்களை மேம்படுத்தி மகிழ்ச்சியாக வாழ இந்த இதழ் வழிகாட்டும் என நம்புகிறேன்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் - ராம்ராஜ் காட்டன்**

நீங்கள் ஒவ்வொருவரும் சில தனித்திறமைகளைப் பரிசாகப் பெற்ற மனிதர்தான். அந்தப்பரிசு என்ன என்பதை நீங்கள்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். மற்றவர்களிடம் இல்லாத அந்த தனித்திறனை மேம்படுத்தி வளர்க்க வேண்டும். அதுவே உங்கள் வாழ்க்கைப்பாதையை வளர்ச்சியை நோக்கி நகர்த்திச் செல்லும். உங்களின் பரிசாக வந்த தனித்திறமைகளை அடையாளம் காண்பது எப்படி?



**குணநலன்:** பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை ஒருவருக்குக் கிடைக்கும் அனுபவங்களே அவரின் குணங்களைத் தீர்மானிக்கின்றன. வெற்றிகள், தோல்விகள், பலம், பலவீனம், அறிவு, அனுபவம் என வாழ்வில் கிடைக்கும் அனைத்துமே நம்மை இந்த உலகில் வழிநடத்துகின்றன. உங்களுக்குக் கிடைத்த அதேபோன்ற அனுபவங்கள் வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. நீங்கள் அடைந்த அதே அறிவை இன்னொருவர் அடைந்திருக்க முடியாது. எந்த ஒரு விஷயத்திலும் நீங்கள் எடுப்பது போன்ற முடிவை வேறு எவரும் எடுக்க முடியாது. இந்த குணநலன்கள் உங்களின் தனித்திறன்.



**அணுகுமுறை:** நீங்கள் வாழ்வில் எப்படிப்பட்ட இடத்தை அடைவீர்கள் என்பதை உங்கள் அணுகுமுறையே முடிவு செய்கிறது. உங்களைச் சுற்றி இருப்பவர்கள் எப்படி இயங்குவார்கள் என்பதையும் அதுவே தீர்மானிக்கிறது. உங்களின் அணுகுமுறை எதிர்மறையாக இருந்தால், சுற்றி இருப்பவர்களும் அப்படியே இயங்குகிறார்கள். நேர்மறையாக இயங்கினால், விளைவுகளும் நேர்மறையாக இருக்கும். எப்படிப்பட்ட நெருக்கடியான சூழலையும், எவ்வளவு மோசமான பிரச்னையையும் நேர்மறையாக அணுகும் ஒருவர், அவற்றிலிருந்து மீண்டு மகிழ்ச்சியாக வாழ முடியும். இதுவும் ஒரு தனித்திறமையே!



**அனுபவங்கள்:** ஒருவரின் தனித்தன்மையை வடிவமைப்பது, அவர் வாழ்நாள் முழுக்க பெறும் அனுபவங்கள்தான். நாம் பெறும் அனுபவங்கள் வழியாகத்தான் இந்த உலகத்தை நாம் பார்க்கிறோம். மோசமான அனுபவங்களை சந்திக்கும்போது பலரும் கோபமும் விரக்தியும் அடைகிறார்கள். மூலையில் முடங்கிப்போகிறார்கள். அனுபவங்கள் தங்களை சிறைப்படுத்த சிலர் அனுமதிக்க மாட்டார்கள். எவ்வளவு மோசமான அனுபவத்தையும் ஒரு பாடமாக எடுத்துக்கொள்வார்கள். அதில் கிடைத்த கசப்பான விளைவுகளை மறந்துவிடுவார்கள். அதுவே தனித்திறமை.



# தனித்திறமை தரும் 10 விஷயங்கள்!

**பழக்கவழக்கங்கள்:** நீங்கள் தொடர்ச்சியாகச் செய்யும் ஒரு விஷயமே உங்களின் பழக்கமாக மாறுகிறது. அதுவே உங்களின் தனித்தன்மையுள்ள அடையாளமாகவும் ஆகிறது. ஆரோக்கியமில்லாத உணவுகளைத் தொடர்ந்து சாப்பிடும் ஒருவர், தன் உடல்நலனைக் கெடுத்துக்கொள்கிறார். அதிகாலையில் விழித்து உடற்பயிற்சி, யோகா, தியானம் என செய்யும் ஒருவர் தன் வாழ்வை சிறப்பானதாக மாற்றுகிறார். அழுக்காகவும் கசங்கலாகவும் இருக்கும் ஆடைகளை அணிபவர்கள், தங்களைப் பற்றிய மோசமான பிம்பத்தை இந்த உலகத்துக்குத் தருகிறார்கள். தரமான வெள்ளை உடைகளை அணியும் ஒருவர், தன் தலைமைப் பண்பை உணர்த்துகிறார். சொற்கள் பொய் சொல்லலாம்; செயல்கள் பொய்யாக இருப்பதில்லை. நல்ல செயல்களே ஒருவரின் தனித்திறமைகளாக மாறும்.



**படைப்புத்திறன்:** ஓவியர்கள், இசைக்கலைஞர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்குத்தான் படைப்புத்திறன் இருக்கும் என்பதில்லை. எல்லோருக்குள்ளும் அது இருக்கிறது. 'இந்த வேலையை இப்படிச் செய்தால் பல மணி நேரம் மிச்சமாகும்' என்று ஓர் அலுவலகத்தில் புதிதாக ஒரு நடைமுறையை உருவாக்குபவர் படைப்புத்திறன் கொண்டவர்தான். வாடிக்கையாளர் ரசிக்கும் வார்த்தைகளைப் பேசி விற்பனை செய்பவரும் படைப்புத்திறன் உள்ளவர்தான். தெருவை சுத்தம் செய்யும்போதுகூட திருத்தமாக சிலர் தங்கள் வேலையைச் செய்வதைப் பார்க்க முடியும். அவர்களும் படைப்புத்திறன் உள்ளவர்கள்தான். அந்த திறனை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம்.



**பார்வை:** வாழ்நாள் முழுக்க தினமும் 24 மணி நேரம் நீங்கள் வாழ்வது போன்ற அதே வாழ்க்கையை இன்னொருவர் வாழ முடியாது. உங்களுக்கு அமைந்தது போன்ற தோற்றமோ, உடல் அமைப்போ, அறிவுத்தன்மையோ இன்னொருவருக்கு இருக்காது. எனவே, எல்லா விஷயங்களையும் நீங்கள் வேறு கோணத்தில் பார்ப்பீர்கள். அதுமட்டுமே வாழ்வில் முன்னேறப் போதுமானதில்லை. மற்றவர்களின் கருத்துகளையும் கேட்க வேண்டும். அவை சரியா, தவறா என்று யோசித்து முடிவெடுக்க வேண்டும். அதுவே உங்கள் தனித்தன்மையை வளர்க்கும்.



**ரசனை:** ஒவ்வொருவரிடமும் 'பிடித்த விஷயங்கள், பிடிக்காத விஷயங்கள்' என்று ஒரு பெரிய பட்டியல் இருக்கும். சில விஷயங்கள் மற்றவர்களின் ரசனையுடன் ஒத்துப் போகும், சில விஷயங்கள் முரண்படும். வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் எல்லா முடிவுகளையும் இந்த ரசனையே தீர்மானிக்கிறது. உணவு முதல் உறவு வரை எல்லாமே ரசனையின் அடிப்படையில்தான் உங்களுக்குக் கிடைக்கும். புதிய விஷயங்களை எப்போதும் திறந்த மனதுடன் ஏற்கும் குணம் உள்ளவர்களின் ரசனை வித்தியாசமாக இருக்கும். அவர்களின் வாழ்க்கை வட்டம் விரிவடையும். மகத்தான விஷயங்கள் கிடைக்கும். இப்படிப்பட்ட ரசனையும் தனித்தன்மையே!



**இலக்குகள்:** ஒருவர் தன் நேரத்தையும் சக்தியையும் உழைப்பையும் எப்படிச் செலவிடுகிறார் என்பதை அவரின் இலக்குகளே தீர்மானிக்கின்றன. அவர் இந்த உலகத்திலிருந்து எதைப் பெறப் போகிறார் என்பதையும் அவையே முடிவு செய்கின்றன. சிறிய இலக்குகள், பெரிய லட்சியங்கள் என எல்லாமே ஒருவருக்கு வேண்டும். வாழ்க்கைப் பாதையில் தடைகள் குறுக்கிடுவதாக நினைக்கும் நேரத்தில், இலக்குகளே நம்மை மீட்டு வழிநடத்தும். வாழ்வில் முழுமை அடையவும் அவை உதவும்.



**பொழுதுபோக்குகள்:** ஓய்வு நேரத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்? நண்பர்களுடன் அரட்டை, செல்போன், சமூக வலைதளங்கள், வீடியோ கேம்கள் என்று செய்வதில் மகிழ்ச்சி அடைவீர்களா? அல்லது உங்களின் தனித்திறமைகளில் பயிற்சி எடுத்து மேன்மை அடைவதில் கவனம் செலுத்துவீர்களா? பொழுதுபோக்கையும் பயனுள்ளதாக மாற்றினால், தனித்திறன் மெருகேறும்.



**வேட்கை:** ஒரு கனவு, ஒரு லட்சியம், ஒரு குறிக்கோள் உங்களுக்கு இருந்தால், அதன்மீது மிகுந்த வேட்கை காட்ட வேண்டும். நீங்கள் விரும்புவது எதுவானாலும், அதை அடையும் வழி இதுதான். வேட்கையே உங்களை வாழ்க்கை முழுக்க வழிநடத்திச் செல்லும். உங்கள் இலக்கு எது? அந்த இலக்கை மிகுந்த தாகமும் வேட்கையுமாக அடைய நினையுங்கள். நிச்சயம் அது கைகூடும்.



***இந்த 10 விஷயங்களின் கலவையாக நீங்கள் இருந்தால், நிச்சயம் நீங்கள் தனித்திறன் உள்ளவர்தான். அதில் சந்தேகமே இல்லை.***

புகழ்பெற்ற சட்ட ஆலோசனை நிறுவனத்தில் பணிபுரிய இளம் வழக்கறிஞர் தேவை என வந்த விளம்பரத்தைப் பார்த்து ஏராளமானோர் வந்திருந்தனர். நல்ல சம்பளத்தோடு, பலவிதமான வழக்குகளை சந்திக்கும் அனுபவமும், பெரிய மனிதர்களின் அறிமுகமும் கிடைக்கும் என்பதால் ஏகப்பட்ட போட்டி.

பல கட்டங்களாக நடந்த தேர்வுகளுக்குப் பிறகு கணேஷ், மோகன் ஆகியோர் இறுதியாக இன்டர்வியூவுக்கு தேர்வானார்கள். நிறுவனத்தின் தலைவர் இருவரையும் தனித்தனியாக சந்தித்துப் பேசி, கணேஷைத் தேர்வு செய்தார். நிராகரிக்கப்பட்ட மோகனுக்குக் காரணம் புரியவில்லை.

கணேஷுக்கு கைகுலுக்கி வாழ்த்து சொல்லிவிட்டு தன் சந்தேகத்தைக் கேட்டார் மோகன்.

''நீங்க ஏன் சட்டம் படிச்சீங்கன்னு நிறுவனத்தின் தலைவர் கேள்வி கேட்டாரே... அதுக்கு என்ன பதில் சொன்னீங்க?'' என்றார் கணேஷ்.

''நாங்க பாரம்பரியமா வக்கீல் குடும்பம். சட்ட நுணுக்கங்களை கரைத்துக் குடித்து, அவ்வப்போது வரும் புதிய தீர்ப்புகளையும் அப்டேட் செய்துகொண்டு, நம்மை நாடி வரும் வாடிக்கையாளர்களுக்கு நீதி கிடைக்கப் போராடுவேன்னு சொன்னேன்'' என்றார் மோகன்.

''நான் அப்படிச் சொல்லலை. திறமையான வக்கீல் ஆகி கை நிறைய சம்பாதிக்கணும்னு சட்டம் படிச்சேன். ஓரளவுக்கு முன்னுக்கு வந்துட்டேன். இங்க வேலைக்கு வந்தா, நானும் சம்பாதிப்பேன்; உங்களுக்கும் சம்பாதிச்சுக் கொடுப்பேன்னு சொன்னேன். வேலை கொடுத்துட்டாங்க. பெயர், புகழைத் தாண்டி பணமும் ஒரு நிறுவனத்துக்கு வேண்டும் இல்லையா?'' என்றார் கணேஷ்.

**சில இடங்களில் வெளிப்படையாகப் பேசுவதும் தனித்திறமையே!**

# கதை நேரம்



மகன்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுவிட, கணவரையும் இழந்து தனிமையில் வசிக்கும் ஒரு பெண்மணிக்கு செல்லமாக வளர்க்கும் நாய்க்குட்டியே துணை. சடை சடையாக முடி தொங்கும் அந்த உயர் ரக நாய்க்குட்டிக்கு வீட்டு ஹாலில் தனி சோபா உண்டு. ஒரு பெரிய பந்து வாங்கிக் கொடுத்து, அந்தப் பந்தை வைத்து கால்பந்து விளையாடவும் அதைப் பழக்கியிருந்தார். தான் விழித்திருக்கும் நேரங்களிலெல்லாம் அந்தப் பெண்மணியை அன்பால் நனைத்தது நாய்க்குட்டி.

அவர்கள் வீடு இருக்கும் தெருவில் புதிதாக முளைத்தது பியூட்டி பார்லர் ஒன்று. நாய், பூனை என வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கான அழகு நிலையம் அது. தன் செல்லத்தையும் அழகுபடுத்தலாம் எனக் கூட்டிப் போனார். நாயை மேலும் கீழும் பார்த்து ஆராய்ந்த அழகு நிலைய நிர்வாகி, ''முடியை ஓரளவுக்குக் கத்தரித்து ஒழுங்குபடுத்த வேண்டும். அப்புறம் ஷாம்பு போட்டு குளிப்பாட்டிவிட்டு, நகங்களைத் திருத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் சேர்த்து இரண்டாயிரம் ரூபாய் ஆகும்'' என்றார்.

அந்தப் பெண்மணி திகைத்தார். ''நான் பியூட்டி பார்லருக்குப் போனால், இதைவிட அதிகமான விஷயங்களைச் செய்கிறார்கள். முகத்துக்கு, புருவத்துக்கு என்று என்னென்னவோ செய்கிறார்கள். அதற்குக்கூட ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆவதில்லை. நீங்கள் என்ன இவ்வளவு அநியாயமாகக் கேட்கிறீர்கள்?'' என்று கத்தினார்.

அழகு நிலைய நிர்வாகி நிதானமாகப் பார்த்துவிட்டு, ''உங்களுக்கு அழகு சிகிச்சை தரும் நபரை நீங்கள் கடிப்பீர்களா? இந்த நாய் கடிக்கும். அதை சமாளித்து அழகு சிகிச்சை செய்வதால்தான் இந்தக் கட்டணம்'' என்று சொன்னார்.

**தனித்திறமைகளுக்கு எப்போதும் அதிக மதிப்பு!**



# கதை நேரம்

குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்தான் ஒருவன். அழிந்துவரும் அரிய இன முயலைக் காட்டிலேயே சமைத்துச் சாப்பிட்டபோது அவனை வனத்துறையினர் கைது செய்திருந்தார்கள். 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை தர வேண்டிய குற்றம் அது. ஆனால் அவன் அழுது ஆரவாரம் செய்து நீதிபதியிடம் இரக்கத்தை சம்பாதித்தான்.

''மை லார்ட்! நான் எப்படிப்பட்ட சூழ்நிலையில் அதைச் செய்தேன் என்பதைச் சொன்னால், எனக்காக நீங்கள் பரிதாபப்படுவீர்கள். வாழ்க்கையில் நான் இதுவரை காட்டுக்கே போனதில்லை. முதல்முறையாக நண்பர்கள் கூப்பிட்டார்கள் என்று போனேன். காட்டுக்குள் டிரெக்கிங் போனபோது பாதை தவறிவிட்டேன். எவ்வளவோ அலைந்தும் நண்பர்களுடன் போய்ச் சேர முடியவில்லை. பக்கத்தில் ஊரும் இல்லை. இருண்ட காட்டுக்குள் மூன்று நாட்கள் எங்கெங்கோ அலைந்தேன். பசியிலும் தாகத்திலும் களைத்துப் போயிருந்த நேரத்தில், இந்த முயல் செத்துக் கிடந்ததைப் பார்த்தேன். எந்த மிருகத்துடனோ நிகழ்ந்த மோதலில் அப்போதுதான் இறந்து போயிருந்தது அது. ஆபத்துக்குப் பாவமில்லை என அதைச் சுட்டு சாப்பிட்டபோதுதான் வனத்துறையினர் என்னைப் பிடித்தார்கள். அதைமட்டும் சாப்பிட்டிருக்காவிட்டால், நான் அப்போதே செத்துப் போயிருப்பேன்...'' என்றபடி அழுதான்.

கண்டிப்பானவர் எனப் பெயர் பெற்றிருந்த அந்த நீதிபதியே நெகிழ்ந்துவிட்டார். ''வேட்டைக்காரனையும் பசிக்கு சாப்பிடுபவனையும் நீங்கள் ஒரே மாதிரிதான் பார்ப்பீர்களா?'' என வனத்துறையினரை கண்டித்தார். ''உணவு இடைவேளைக்குப் பிறகு தீர்ப்பு'' எனச் சொல்லிவிட்டு, இருக்கையிலிருந்து எழுந்து தனது அறைக்குப் போனார். சாப்பிடும் நேரத்தில், 'இவனை சோதித்துப் பார்க்கலாமே' என்று ஒரு யோசனை தோன்றியது.

சாப்பிட்டு முடித்து வந்து தன் இருக்கையில் அமர்ந்தவர், அவனை நெருக்கமாக அழைத்தார். ''முயல் கறி டேஸ்ட் எப்படி இருந்தது?'' என்று கிசுகிசுப்பான குரலில் கேட்டார். அவன் சூழலை மறந்தான்; கேள்வி கேட்டவரையும் மறந்தான். ''அப்படி ஒண்ணும் பெரிய டேஸ்ட் இல்லை சார்! மான் கறி, காட்டெருமைக் கறியெல்லாம் காட்டுல சமைச்சு சாப்பிட்டிருக்கேன். அந்த ருசி வராது இது'' என்றவன், சட்டென தன் தவறை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டான். நீதிபதி முறைத்த முறையிலேயே அவனுக்குத் தீர்ப்பு புரிந்தது.

**சில உண்மைகளை வெளியில் கொண்டுவர தனித்திறமை தேவைப்படுகிறது!**



# உங்களிடம் தனித்திறன் இருக்கிறதா?

ஒரு நகரத்தில் மிகப்பெரிய ஏரி இருந்தது. அதில் மீன் வளர்த்தார் ஒருவர். ஏரியில் நீர்க்கோழிகள் நிறைய இருந்தன. அவை அளவுக்கு மீறி பெருகி, மீன்களை சாப்பிட ஆரம்பித்தன. நீர்க்கோழிகளின் எண்ணிக்கையைக் குறைக்காவிட்டால் மீன்கள் அழிந்துவிடும் ஆபத்து இருந்தது.

நீரில் அந்தக் கோழிகளை வேட்டையாட சிரமமாக இருந்தது. ஊரிலுள்ள வேட்டைக்காரர் ஒருவர், இதற்குத் தீர்வு கண்டுபிடிக்க நினைத்தார். தன் நான்கு நாய்களுக்கும் நீரில் ஓடும் பயிற்சியைக் கொடுத்தார். உலகில் யாராலுமே செய்ய முடியாத செயல் நீரில் நடப்பதும் ஓடுவதும் ஆகும். ஆனால், கடும் பயிற்சிக்குப் பிறகு அதையும் சாதித்தார் வேட்டைக்காரர்.

பிறகு தன் நண்பர்களை அழைத்து விருந்து வைத்தார். அவர்கள் விருந்து உண்ணும்போதே, தன் நான்கு நாய்களையும் ஏரிக்குள் விட்டார். அவை நீரில் ஓடி ஓடி நீர்க்கோழிகளை வேட்டையாடி வந்து கரையில் போட்டன.

''என் நாய்களைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று நண்பர்களிடம் கேட்டார் வேட்டைக்காரர். அதற்கு அந்த நண்பர்கள், ''பார்த்தோம்... பார்த்தோம்... உன் நாய்களுக்கு நீச்சலே அடிக்கத் தெரியவில்லை. அதனால்தானே நீரில் ஓடுகின்றன'' என்றார்கள்.

'எவ்வளவு பெரிய சாதனையைச் செய்திருக்கிறோம். இவ்வளவு அலட்சியமாகச் சொல்கிறார்களே' என்று வேட்டைக்காரர் வேதனையுற்றார். பின்பு அந்த நாய்களை நாட்டு மன்னனிடம் காட்டினார். மன்னன் வியந்து பார்த்து, அவரைப் பாராட்டி பரிசளித்தான். ''இன்னும் பல நாய்களுக்கு பயிற்சி கொடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான்.


'மிகச் சிறந்த தனித்திறமையை ஒருவர் அடைந்தாலும், எதிர்மறை எண்ணம் உள்ளவர்கள் அதை விமர்சனம்தான் செய்வார்கள். அதைக் கண்டுகொள்ளாமல் வாழ்வில் முன்னேற வேண்டும்' என்ற பாடத்தை வேட்டைக்காரர் கற்றுக்கொண்டார்.

பூமியின் அடி ஆழத்திலிருந்து தோண்டி எடுக்கப்படும்போது எந்த வைரமும் ஜொலிப்பதில்லை. அதை பட்டை தீட்டுவதற்கு ஒரு தேர்ந்த நிபுணர் தேவை. உங்களுக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறமையை வேறொருவர் பட்டை தீட்ட வேண்டும் என்பதில்லை. அதை நீங்களே கூட செய்யலாம். உங்களிடம் தனித்திறன் என்ன இருக்கிறது என்பதை எப்படிக் கண்டறிவது?

- ஆழ்மனதைத் திறந்து பார்த்து உங்களை சுயபரிசோதனை செய்துகொள்ளுங்கள். உங்களின் பிளஸ் என்ன, மைனஸ் என்ன என்பதெல்லாம் தெரியும். எந்த ஒரு செயலையும் செய்வதற்கு உங்களிடம் எந்த அளவுக்குத் திறமை இருக்கிறது என்பது புரியும்.

- எந்த ஒரு திறனையும் வளர்த்துக்கொள்வதற்கு அறிவு முக்கியம். கற்றுக்கொள்ளத் தயாராகும்போது, உங்களுக்குள் மறைந்து கிடக்கும் திறமைகள் வெளியில் வரும். தனக்குள் என்ன தனித்திறமை இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் அளவுக்கு அடிப்படை அறிவு வேண்டும். பிறகு அந்தத் தனித்திறமையை வளர்ப்பதற்குத் தனியாகக் கற்றுக்கொண்டு அறிவை வளர்க்க வேண்டும்.

- தீக்குச்சி எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், ஒரு தீப்பெட்டியில் உரசும்போதுதான் பற்றிக்கொள்ளும். ஒருவருக்குள் இருக்கும் தனித்திறமையை ஏதோ மந்திர வித்தை செய்வது போல திடீரென வெளியில் கொண்டுவர முடியாது. கடின உழைப்பு, தூண்டுதல், விடாமுயற்சி, தனக்குள் கேள்விகள் கேட்டு உணர்வது, கற்பனைத் திறன், கற்ற அறிவைக் கச்சிதமாகப் பயன்படுத்துவது என்று ஏராளமான விஷயங்கள் அதற்குத் தேவை. எல்லாவற்றையும் தாண்டி, ஒருவருக்கு இதில் ஆர்வமும் இருக்க வேண்டும். ஆர்வமே இல்லாத ஒருவரின் தனித்திறமை எப்போதும் வெளிப்படாது.





● ஒருவர் எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும், அவர் எல்லா விஷயங்களிலும் நிபுணராக இருக்க முடியாது. காலையில் செய்தித்தாளைப் பிரித்துப் படிக்கும் ஒருவர், அதிலிருக்கும் எல்லா செய்திகளையும் படிப்பதில்லை. தனக்குப் பிடித்த, தனக்கு ஆர்வம் இருக்கிற, தான் தெரிந்துகொள்ள விரும்புகிற விஷயங்களை மட்டுமே படிப்பார். அதுபோல, ஒருவருக்கு சில விஷயங்களில் மட்டுமே முழு கவனம் இருக்க முடியும். அந்த சில விஷயங்களில் ஒருவருக்கு எதில் ஆர்வம் அதிகம் என்று பார்த்து, அதில் நம்பிக்கையுடன் முன்னேற வேண்டும். அதுவே தனித்திறமையை வளர்க்கும்.

● தேவையான விஷயங்களுக்கு பணமும் நேரமும் செலவிட்டு கற்றுக்கொள்வது முக்கியம். அதேபோல, தேவையற்ற விஷயங்களில் பணத்தையோ, நேரத்தையோ வீணடிக்காமல் இருப்பதும் முக்கியம். குறிபார்த்து கல் எறிந்தால்தான், ஒரே கல்லில் ரெண்டு மாங்காய் கிடைக்கும். இலக்கில்லாமல் எறியும் கற்கள் எதையும் கொடுக்காது.

● ஒவ்வொரு திறமையை அடைவதற்கும் குறைந்தபட்சமாக சில தகுதிகள் தேவை. அந்தரத்தில் கோட்டை கட்ட ஆசைப்படக்கூடாது. பாடகர் ஆக விரும்பும் ஒருவருக்கு இனிமையான குரல் வளம் வேண்டும், ராகத்துடன் பாடத் தெரிந்திருக்க வேண்டும். இளம் வயதிலிருந்து தினமும் பயிற்சி எடுக்க வேண்டும். ஓவியராக ஆக விரும்பும் ஒருவருக்கு வரையும் ஆர்வமும் வேண்டும்; வண்ணங்களை ரசிக்கவும் கற்றிருக்க வேண்டும். விளையாட்டு வீரராவதற்கு நினைக்கும் ஒருவர், உடலைக் கச்சிதமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

● ஆர்வம் வேறு, திறமை வேறு. இரண்டையும் குழப்பிக்கொள்ளக்கூடாது. கிரிக்கெட் போட்டிகளை ஆர்வத்துடன் டி.வியில் பார்க்கும் எல்லோருமே கிரிக்கெட் ஆடிவிட முடியாது. அவர்களுக்கு இருப்பது ஆர்வம். தாங்கள் நேசிக்கும் வீரர்கள் ஆடுவதை ரசிக்கவும், அவர்களின் வெற்றிகளைக் கொண்டாடவுமே இவர்கள் போட்டிகளைப் பார்க்கிறார்கள். கிரிக்கெட்டில் திறமையுள்ள பிள்ளைகள் இப்படி இருப்பதில்லை. அவர்கள் தினமும் பல மணி நேரம் மைதானத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி முடித்து விளையாடிப் பழகுகிறார்கள். இதுவே திறமையை வளர்க்கிறது.

அதிர்ஷ்டவசமாக ஏதோ நிகழ்ந்துவிடும் என்றோ, எதுவும் முயற்சி செய்யாமலே ஒரு கனவு நிஜமாகிவிடும் என்றோ கற்பனை செய்யக்கூடாது. நிறைய படியுங்கள், நிறைய மனிதர்களுடன் பேசுங்கள், நிறைய கற்றுக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் தேவைப்படும் தருணங்களில் தயங்காமல் ரிஸ்க் எடுங்கள். வாழ்க்கையை முழுமையாக வாழுங்கள். உங்களிடம் இருக்கும் தனித்திறனைக் கண்டறிவீர்கள், அதன்பின் வாழ்வில் பெரிய மாற்றங்கள் நிகழும். ●



## தலைகீழ் தனித்திறன்!

விஜய் டி.வி 'நீயா நானா' நிகழ்ச்சியில் ஒரு சுவாரசியம். 'என்னால் எந்த தமிழ் வாக்கியத்தையும் தலைகீழாகப் பேச முடியும்' என்றார் ஓர் இளம்பெண். 'வணக்கம்' என்று நாம் சொன்னால், 'ம்கக்ணவ' என்பார் அவர். இப்படி அவரால் வேகமாகப் பேச முடியும். பாடல்களைப் பாட முடியும். திருக்குறளை தலைகீழாகச் சொல்ல முடியும்.

ஒருமுறை இப்படிப் பேசிப் பார்த்ததில் சுவாரசியம் ஏற்படவே, அடுத்தடுத்து பயிற்சி எடுத்து இதைப் பழகி இருக்கிறார். அவர் இப்படி ஒரு புதுமொழியில் பேசினால், அவரிடம் அதே மொழியில் பேச யாருமே இல்லை. ஆனாலும் அவர் பேசிப் பழகினார். 'இதனால் என்ன நன்மை?' என்று சிலருக்குக் கேள்வி எழலாம். 'யாரிடமும் இல்லாத ஒரு தனித்திறமை என்னிடம் இருக்கிறது' என்ற பெருமிதம் அவருக்குக் கிடைக்கும். அது அவரின் தன்னம்பிக்கையை வளர்க்கும். 'எதையும் தொடர்ச்சியாகப் பழகினால் நிச்சயம் அதில் நிபுணர் ஆகலாம்' என்ற நம்பிக்கை எல்லோருக்கும் கிடைக்கும்.






## ருசியால் சம்பாதிக்கலாம்!

பலரும் காசு கொடுத்து காபி வாங்கிக் குடிக்கிறார்கள். ஆனால், காபியை குடித்துப் பார்ப்பதற்கே லட்சக்கணக்கில் பணம் வாங்குவோரும் இங்கு உண்டு. ஆம், 'காபி டேஸ்டர்' என்று அவர்களுக்குப் பெயர். புதுவிதமான கலவையில், அல்லது புதிய தோட்டத்தில் விளைந்த காபி கொட்டையில் காபித்தூளை உருவாக்கி விற்பனைக்கு அனுப்பும் முன்பாக அதன் சுவையை பரிசோதிப்பது நிறுவனங்களின் வழக்கம். இதற்காக நிபுணர்கள்

## தனித்திறன் மந்திரங்கள் ஐந்து!



* உங்களிடம் ஒரு வேலை தரப்படுகிறது. 'அதைச் செய்துதான் ஆகவேண்டும், வேறு வழியே இல்லை' என்றால் அதை முழுமனதுடன் ரசித்து, விரும்பிச் செய்யுங்கள். அப்போதுதான் அதைச் சரியாகவும் செய்ய முடியும்; விரைவாகவும் செய்ய முடியும்.

* 'அமைதியான நாட்களில் வியர்வை சிந்துபவன், போர்க்களத்தில் ரத்தம் சிந்த தேவையிருக்காது' என்று ஒரு பழமொழி உண்டு. எதையும் செய்வதற்கு முன்பாகப் பயிற்சி தேவை. வருடத்தில் வெறும் இரண்டு வாரங்கள் போட்டியில் பங்கேற்கும் ஒரு குத்துச்சண்டை வீரர், வருடம் முழுக்க தினம் பல மணி நேரம் பயிற்சி செய்கிறார்.

* 'எனக்கு இருக்கும் திறமைக்கு வாய்ப்புகள் தேடி வரும்' என்று இருப்பவர்கள் ஒரு ரகம். 'இதில் எனக்கு என்ன வாய்ப்பு கிடைக்கும்' என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சூழலிலும் தேடுபவர்கள் இன்னொரு ரகம். நீங்கள் இரண்டாவது வகை மனிதராக இருங்கள்.

* 'எனக்கும் ஒரு காலம் வரும், இதைச் செய்வதற்கு ஒரு பொருத்தமான நேரம் வரும்' என்று காத்திருப்பதில் அர்த்தம் இல்லை. பத்தாயிரம் மைல் பயணம்கூட ஒற்றைக் காலடியில்தான் தொடங்குகிறது. தினம் தினம் சிறிது சிறிதாக உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுங்கள்.

* உங்கள் சாதனைகளைக் கொண்டாடுங்கள், அதில் மகிழ்ச்சி அடையுங்கள். ஆனால், மனநிறைவு அடையாதீர்கள். அது 'அடுத்து என்ன' என்ற கேள்வியை உங்கள் பார்வையிலிருந்து மறைத்துவிடும். உங்களை இன்னும் சிறந்தவராக மாறவிடாமல் தடுக்கும்.



## தூக்கமும் ஒரு தனித்திறன்!

நிறைய தூங்கும் மனிதர்களை 'சோம்பேறி' என்பார்கள். 'வாழ்க்கையில் அவர்களுக்கு எந்த முன்னேற்றமும் கிடைக்காது' என்பார்கள். ஆனால், தூக்கத்தின் மூலம் சம்பாதிப்பவர்களும் உண்டு.

சிலர் படுக்கையில் படுத்தாலும் தூக்கம் வராமல் அரை மணி நேரம் புரண்டு கொண்டிருப்பார்கள். சிலர் படுத்த அடுத்த நிமிடமே தூங்கிவிடுவார்கள். ஒவ்வொருவரின் இயல்பு மாறும். சிலருக்கு சொகுசான இடத்தில் படுத்தால்தான் தூக்கம் வரும். படுக்கை செய்யும் நிறுவனங்கள் இவர்களைத்தான் தேடிப் பிடிக்கின்றன. புது ரகங்களில் சொகுசுப் படுக்கைகளை உருவாக்கும்போது, அதில் படுத்துத் தூங்கிப் பார்க்க இவர்களை அழைக்கின்றன. 'அந்தப் படுக்கையில் படுத்தால் தூக்கம் வருகிறதா? எங்காவது உறுத்துகிறதா' என்று சோதனை செய்து பார்த்து பரிந்துரை தருவது இவர்களின் வேலை. இப்படிப்பட்ட தூக்க சோதனையாளர்கள் உலகம் முழுக்க இருக்கிறார்கள்.

**தனித்திறன் இருந்தால், தூங்கியும் சம்பாதிக்கலாம்!**

இருக்கிறார்கள். விமானத்தில் பயணம் செய்து ஒவ்வொரு நிறுவனத்துக்கும் போய் காபியைக் குடித்துப் பார்த்து சுவை பற்றி சான்றிதழ் தருவது இவர்களின் வேலை. 'இது எப்படிப்பட்ட சுவை? இதன் தரம் எப்படி இருக்கிறது? எந்தெந்த நாடுகளில் இதற்கு வரவேற்பு கிடைக்கும்?' என்று பரிந்துரை தருவது இவர்கள்தான்.

எல்லோரும்தான் காபி குடிக்கிறார்கள். ஆனால், ஒரு மிடறு பருகியதுமே, அது எந்த நிறுவனத்தின் தயாரிப்பு, எந்த ஊரில் விளைந்தது என்று இவர்களால் சொல்ல முடியும். ருசியை தங்களின் தனித்திறனாக வளர்த்து சம்பாதிப்பவர்கள் இவர்கள். உணவு, பானங்கள் எல்லாவற்றுக்கும் இப்படி டேஸ்டர்கள் இருக்கிறார்கள்.

## ஓடுவது மட்டுமே முக்கியம் இல்லை!

'கிரிக்கெட் மைதானத்தில் டோனி வேகமாக ஓடி ரன் எடுக்கிறார். இவரை ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்துக்கு அனுப்பினால் தங்கப்பதக்கம் வெல்வாரே' என்று யாரும் யோசிப்பதில்லை. 'உசைன் போல்ட் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் குவிக்கிறாரே, இவரை கிரிக்கெட் ஆட அனுப்பினால் உலகக்கோப்பை நமக்குத்தான்' என்று விபரீத யோசனை வருவதில்லை. கிரிக்கெட்டில் ஓட்டத்தைத் தாண்டியும் நிறைய நுணுக்கங்கள் உண்டு. கிரிக்கெட்டில் இல்லாத பல விசேஷ திறமைகள் ஓட்டப்பந்தயத்துக்குத் தேவைப்படும்.

ஒருவர் ஏதோ சாதனை செய்கிறார் என்றால், 'அதை நாமும் செய்யலாமே' என்று கண்மூடித்தனமாக காப்பி அடிக்கக்கூடாது. 'அவரிடம் இருந்த தனித்திறமை என்ன? அவர் சாதனைக்கு அது எப்படி உதவியது? நமக்கு என்ன தனித்திறமை இருக்கிறது? அதை வைத்து நாம் என்ன செய்ய முடியும்?' என்றுதான் யோசிக்க வேண்டும். புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டால், உடலில் கோடுகள் வரலாம். ஆனால், பூனை புலியாகிவிடாது.



# எல்லோருக்கும் இருக்கிறது தனித்திறன்!

'வாழ்க்கை எல்லோருக்கும் அழகிய பரிசுகளைக் கொடுக்கிறது. நிறைய பேர் தங்கள் வாழ்நாள் முழுக்க அந்தப் பரிசுப்பெட்டியைத் திறந்து பார்ப்பதே இல்லை' என்று ஒரு பொன்மொழி உண்டு. எல்லோரிடமும் தனித்திறன் இருக்கிறது, ஆனால் வெகு சிலரே தங்கள் தனித்திறனை உணர்கின்றனர். அப்படி உணர்பவர்களில் அரிதாக சிலரே அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்துகின்றனர்.

ஒரு கம்ப்யூட்டரில் இருக்கும் பல்வேறு பாகங்களுக்குள் ஒருநாள் சண்டை வந்தது. அந்தக் கம்ப்யூட்டர் இயங்க எது முக்கியம் என்பதில்தான் வாக்குவாதம் ஆரம்பித்தது. மானிட்டர் எனப்படும் கம்ப்யூட்டர் திரை, ''நான் இல்லாவிட்டால் இந்தக் கம்ப்யூட்டரில் இருக்கும் எதையுமே யாராலும் பார்க்க முடியாது. நான்தான் இந்தக் கம்ப்யூட்டருக்கு முக்கியமான பாகம்'' என்றது. மவுஸ் அதைப் பார்த்து கிண்டலாக சிரித்து, ''உன்னை வெறுமனே பார்க்கிறார்கள். ஆனால், நான் இல்லாவிட்டால் கம்ப்யூட்டரில் பார்க்கும் எதையுமே கட்டுப்படுத்த முடியாது. எல்லாவற்றையும் திறந்து மூடும் சக்தியுள்ள நானே முக்கியமான பாகம்'' என்றது.

கீ போர்டு அதை மறுத்தது. ''நான் இல்லாவிட்டால் ஒரே ஒரு எழுத்தைக் கூட கம்ப்யூட்டரில் டைப் செய்ய முடியாது. கம்ப்யூட்டரில் எதையும் சேமிக்கவோ, அழிக்கவோ நான்தான் உதவுகிறேன். ஆக்கவும் அழிக்கவும் சக்தியுள்ள நானே முக்கியமான பாகம்'' என்றது. ஸ்பீக்கர் குறுக்கே புகுந்து, ''நான் இல்லாவிட்டால் எந்த சத்தமும் கேட்காது. நான்தான் முக்கியம்'' என்றது.


இந்த வாக்குவாதம் முடிவுக்கு வராததால், எல்லா பாகங்களும் சி.பி.யு எனப்படும் கம்ப்யூட்டரின் மையக் கட்டுப்பாட்டுப் பகுதியை நாடின. நியாயமான தீர்ப்பு சொல்லுமாறு வேண்டின. சி.பி.யு அமைதியாக சிரித்துவிட்டு, ''உங்களை கம்ப்யூட்டருடன் இணைக்கும் வயர்கள் எங்கே வந்து சேர்கின்றன என்று பாருங்கள்'' என்றது. எல்லாம் பார்த்தன. அவை எல்லாமே சி.பி.யு வில் வந்து இணைந்திருந்தன.

''இந்தக் கம்ப்யூட்டரின் மூளை போன்ற பகுதி நான். உங்கள் எல்லோரையுமே நானே கட்டுப்படுத்துகிறேன். எல்லா கட்டளைகளையும் என்னையே வந்தடைகின்றன. நானே அவற்றைப் பிரித்து உங்களுக்கு அனுப்புகிறேன்.

ஆனால் அதற்காக, நான்தான் முக்கியம் என்று சொல்ல மாட்டேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை உள்ளது. கம்ப்யூட்டர் இயங்குவதற்கு அது தேவைப்படுகிறது. ஒருவர் செய்வதை இன்னொருவரால் செய்ய முடியாது. 'யார் மேலானவர், யார் கீழானவர்' என்று பார்க்க வேண்டாம். எல்லோருமே முக்கியமானவர்கள்தான்'' என்றது. உண்மையைப் புரிந்துகொண்டு அவை அமைதியாகின.

ஒருவரின் தனித்திறன் என்பது எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. நாம் அதை உணர்ந்து பயிற்சி செய்தால், அந்தத் திறமை அதிகமாகும். உணராமல் அமைதியாக இருந்தால், அது அப்படியே காலப்போக்கில் காணாமல் போய்விடும். தங்களிடம் தனித்திறன் ஒன்று இருப்பதை உணர்ந்து வெகுசிலரே அதைக் கச்சிதமாகப்





பயன்படுத்துகின்றனர். தன் தனித்திறனை பயன்படுத்தாத ஒருவர் சாதாரண வாழ்க்கை வாழ்கிறார். பயன்படுத்தும் இன்னொருவர் சாதனையாளர் ஆகிறார்.

பள்ளி மற்றும் கல்லூரிப் பருவத்தில் எல்லோருக்குமே கனவுகள் இருக்கும். தங்களுக்கு எது நன்றாக வருகிறது, எதில் தடுமாற்றம் ஏற்படுகிறது என்பது புரியும். ஆசிரியர்களும்கூட இதை கவனித்து வழிகாட்டுவார்கள். பள்ளிப்படிப்பு முடித்து, கல்லூரிக்குச் சென்று பட்டம் வாங்கியபிறகு, தாங்கள் படித்த படிப்புக்கு ஏற்றபடி ஏதோ ஒரு வேலை அல்லது தொழிலில் இணைகிறார்கள். அதன்பிறகு அந்த வேலையே ஒருவரின் வாழ்க்கையாக மாறிவிடுகிறது. தங்களின் தனித்திறமையை மறந்து, அந்த வேலையைக் குறித்தே எப்போதும் சிந்திக்கிறார்கள்.

தனக்குக் கிடைத்த ரயில்வே வேலை போதுமானது என்று மகேந்திர சிங் டோனி நினைத்திருந்தால், இந்திய கிரிக்கெட்டுக்கு ஒரு மகத்தான கேப்டன் கிடைத்திருக்க மாட்டார். மீண்டும் இந்தியாவுக்கு உலகக்கோப்பை கிடைத்திருக்காது. ராணுவ சேவையை மட்டும் பார்த்தால் போதும் என ராஜ்யவர்தன் சிங் ரதோர் நினைத்திருந்தால், இந்தியாவுக்கு ஒலிம்பிக்கில் ஒரு வெள்ளிப்பதக்கம் கிடைத்திருக்காது. பெட்ரோல் நிறுவனத்தின் குமாஸ்தா வேலையே தன் குடும்பத்தை நடத்த போதுமானது என்று திருபாய் அம்பானி நினைத்திருந்தால், இன்று ரிலையன்ஸ் என்ற நிறுவனமே இல்லை.

ஒவ்வொருவரும் மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான திறனுடன்தான் பிறக்கிறார்கள். ஆனால், எந்த முயற்சியும் செய்யாமல் சராசரி வாழ்க்கை வாழ்கிறார்கள். 'உங்களின் சிறப்புத் திறன் என்ன?' என்று யாராவது கேட்டாலும் பதில் சொல்ல அவர்களுக்குத் தெரிவதில்லை. தனக்குள் இருக்கும் தனித்திறனை உணர்ந்து அதை மெருகேற்றும் தருணத்தில் ஒருவரின் வாழ்க்கை மகத்தானதாக மாறுகிறது.

ஆனால் அதைப் பலரும் செய்வதில்லை என்பதுதான் வேதனை. பண்டிகை மற்றும் விசேஷ தினங்களில் வீட்டை அலங்கரிப்பதற்காக சில அலங்காரப் பொருட்களை வாங்குவார்கள். சில நாட்கள் பயன்படுத்திவிட்டு, அவற்றைப் பரணில் எங்கோ போட்டு வைப்பார்கள். அதன்பின் அதை மறந்துவிடுவார்கள். எப்போதோ ஒரு தருணத்தில் வீட்டை சுத்தம் செய்யும்போது, அது புதுப்பொலிவு மாறாமல் திரும்பவும் கிடைக்கும். 'இது இருப்பது தெரியாமல் திரும்பத் திரும்ப செலவு செய்து பொருட்கள் வாங்கினோமே' என வேதனைப்படுவீர்கள்.

திறன்களும் அப்படித்தான். நம்மிடம் அவை இருக்கின்றன என்று உணர்ந்து பயன்படுத்தாமல் போனால், நமக்கு அப்படிப்பட்ட திறமைகள் இருப்பதே மறந்துபோகும். இயற்கையாக வாழ்க்கையில் கிடைத்த ஒரு பரிசு, பயன்படுத்தாமலே வீணாகும். மாற்றுத்திறனாளி ஒருவரிடம் தேடினாலும், ஏதோ ஒரு தனித்திறன் இருக்கும். அவர் அதைக் கச்சிதமாகப் பயன்படுத்தினால், யாருடைய உதவியும் இல்லாமலே முன்னேறலாம். எப்போதும், எந்த சூழலிலும் உங்களின் திறனை சந்தேகப்படாதீர்கள்.

சிலருக்குத் தங்களின் திறமை சாதாரணமாகத் தெரியலாம். பிரமாத ருசியில் சமைப்பார் ஒரு பெண். 'எல்லா குடும்பத்தலைவிகளையும் மாதிரியே நானும் சமைக்கிறேன்' என்று தன்னைப் பற்றி தவறான அபிப்ராயம் வைத்திருப்பார். அவரின் தனித்துவ ருசி சமையலை ஹோட்டல் அல்லது கேட்டரிங் மூலம் பிரபலமடையச் செய்தால், அவர் வாழ்க்கையே மாறும். தனித்திறனில் பெரியது, சிறியது என்று வித்தியாசங்கள் எதுவுமில்லை.

சாதாரண திறமையுடன் அசாதாரண முயற்சி இணையும்போது எதையும் சாதிக்க முடியும். நீங்கள் எப்போது சாதனையாளர் ஆகப் போகிறீர்கள்? ●



# பணிவும் எளிமையும் தரும் தனித்திறன்!

இந்தியா முழுக்க அறிமுகம் பெற்ற நடிகர் அமிதாப் பச்சன். 40 ஆண்டுகளுக்கு முன்பே புகழ்பெற்ற ஹீரோவாக இருந்தார். அப்படி புகழின் உச்சத்தில் இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அவர் சமீபத்தில் சொன்னார்:

ஒருமுறை நான் விமானத்தில் பயணம் செய்தேன். எனக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த பயணி, சாதாரண சட்டை பேன்ட் அணிந்திருந்தார். வயதான மனிதர், நன்கு படித்தவர் போன்று தோற்றமளித்தார். நான் விமானத்துக்குள் ஏறியதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மற்ற பயணிகள் என்னைப் பார்த்து பரவசம் அடைந்தார்கள். சிலர் என் இருக்கையின் அருகில் வந்து ‘ஹலோ’ சொல்லி கை கொடுத்தார்கள். ஆனால், இந்த மனிதர் மட்டும் என்னை கவனித்தது மாதிரி தெரியவில்லை.


எனக்கு அது உறுத்தலாக இருந்தது. ஒருவேளை அவர் நாளிதழை உன்னிப்பாகப் படித்துக் கொண்டிருந்ததால் என்னை கவனிக்காமல் இருக்கலாம் என நினைத்தேன். தேநீர் வழங்கப்பட்டபோது, அமைதியாக அதை வாங்கி ரசித்துப் பருக ஆரம்பித்தார். அப்போதும் என் பக்கம் திரும்பவில்லை. எனக்குள் இருந்த ஈகோ அதிகமானது. என்னை அவருக்கு யார் என்று தெரியவில்லையா? அல்லது தெரிந்தும் தவிர்க்கிறாரா?

பொறுத்துக்கொள்ள முடியாமல், அவரைப் பார்த்து சிரித்து ‘ஹலோ’ சொன்னேன். அவரும் புன்னகை செய்து 'ஹலோ' சொன்னார். நாங்கள் பேச ஆரம்பித்தோம். சமூகம், பொருளாதாரம், மக்கள் என்று பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். எதைப் பற்றியும் அவ்வளவு நேர்த்தியாக அவர் பேசினார். எவரையும் நிமிடத்தில் ஈர்த்துவிடும் பேச்சுத்திறமை அவரிடம் இருந்தது. அப்படியே பேச்சை சினிமா பக்கம் கொண்டு வந்தேன்.

‘‘நீங்கள் சினிமா பார்ப்பதுண்டா?’’ என்று கேட்டேன். ‘‘அதிகம் பார்த்ததில்லை. மிகச் சில படங்கள்தான். பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தது’’ என்றார் அவர். அதனால்தான் அவருக்கு என்னைத் தெரியவில்லை என்பதைப் புரிந்துகொண்டு, ‘‘நான் சினிமா துறையில் இருக்கிறேன்’’ என்றேன்.

‘‘அப்படியா? ரொம்ப நல்லது. நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார். ‘‘நடிகராக இருக்கிறேன்’’ என்றேன். அவர் வியப்போ, ஆச்சர்யமோ அடையவில்லை. என்னைப் பற்றி விசாரிப்பார் என்று நினைத்த எனக்கு ஏமாற்றம் ஆகிவிட்டது.

விமானம் தரையிறங்கியது. நாங்கள் கீழே இறங்கும்போது சற்றே கர்வத்துடன், ‘‘உங்களுடன் பயணம் செய்ததில் மிக்க மகிழ்ச்சி. என் பெயர் அமிதாப் பச்சன்’’ என்றேன். அந்த மனிதரும் சிரித்தபடி, ‘‘உங்களை சந்தித்த இந்த நாள் நல்ல நாளாக இருக்கட்டும். என் பெயர் ஜே.ஆர்.டி.டாடா. மோட்டார் தொழில் செய்கிறேன்’’ என்று பணிவுடன் சொல்லிவிட்டு விடைபெற்றார்.



நான் திகைத்து நின்று விட்டேன். உலகப் புகழ்பெற்ற டாடா நிறுவனத்தின் தலைவரை நான் சாதாரணமாக எடை போட்டிருக்கிறேன். என்னை அவருக்குத் தெரியவில்லை என எனக்குள் ஈகோ எழுந்திருக்கிறது. கர்வத்துடன் அவரிடம் என்னை அறிமுகம் செய்தேன். அவர் எவ்வளவு பணிவாக நடந்துகொண்டார்.

அன்றுதான் நான் கற்றுக் கொண்டேன் பணிவைப் பற்றி. பெயரையும் புகழையும் வைத்து, ‘நாம்தான் பெரிய ஆள்’ என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், நம்மை விட வசதியிலும், அறிவிலும், படிப்பிலும் உயர்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். எப்போதுமே பணிவாய் இருங்கள். அது உங்களுக்கு சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து கொடுக்கும்.

பணிவும் எளிமையும் நம் அடையாளங்களாக இருக்கட்டும். பொறுமையைவிட மேலான தவமுமில்லை. அமைதியை விட மேலான இன்பமுமில்லை. இரக்கத்துடன் பிறருக்குத் தருவதைவிட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமுமில்லை.

யோசித்துப் பார்த்தால் நம் உயர்வு நமக்குப் புரியும். உடல் அளவில் நம்மைவிட பலசாலி யானை. நிலத்தில் வாழ்வதிலேயே பிரமாண்டமான உயிரினம் அதுதான். நம்மைவிட வேகத்தில் சிறந்தது குதிரை. சளைக்காமல் உழைக்கும் வல்லமை பெற்றது ஒட்டகம். இப்படி விலங்குகள் நம்மைவிட பலமடங்கு பலசாலியாக இருந்தாலும், நாம்தான் அவற்றை அடக்கி ஆள்கிறோம். காரணம், மனிதர்களின் தனித்திறன். வீட்டு விலங்குகளை மட்டுமில்லை, காட்டு விலங்குகளையும் அடக்கி ஆளுமை செய்யும் திறன் மனிதர்களுக்கு உள்ளது.

அது, ஆறாம் அறிவின் மகத்துவம். மற்ற உயிரினங்களிலிருந்து மனிதர்கள் பல விதத்தில் மாறுபடுகிறார்கள். சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வதில், தன் தேவைகளைத் தானே தேடிப் பூர்த்தி செய்து கொள்வதில், நன்மையும் தீமையும் அறிந்து மற்றவர்களுக்கு வழிகாட்டுவதில் மனிதர்களின் தனித்திறன் வெளிப்படுகிறது.

இவ்வுலகில் படைக்கப்பட்ட மற்ற உயிரினங்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சி எதுவுமில்லை. விலங்குகள் எதிர்காலம் பற்றிக் கவலைப்படுவதில்லை, தன் தேவைகள் குறித்து சிந்திப்பதும் இல்லை, சுற்றி நடக்கும் விஷயங்கள் தனக்கு என்ன பாதிப்பு ஏற்படுத்தும் என்பது குறித்த அக்கறையும் அவற்றுக்கு இல்லை. அந்த வகையில் அறியாமை ஒரு வரம். ஆனால், தான் அறிவாளி என்று கர்வப்படும் மனிதனால் வாழ்க்கையில் ஜெயிக்க



முடிவதில்லை. காரணம், அறிவு மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. தன்னம்பிக்கை, மனோபலத்துடன் தனித்திறன் பெற்றால் மட்டுமே அது சாத்தியமாகும்.

நம்பிக்கை எனும் வானவில் நம்மிடம் எப்போதும் இருக்கவேண்டும். வானவில் தோன்றும்போது வானம் அழகாகிறது. நம்பிக்கை தோன்றும்போது வாழ்க்கை அழகாகிறது. வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். அந்த அனுபவம் ஆளுக்கு ஆள் மாறுபடும். வெற்றிகளில் கிடைக்கும் மகிழ்ச்சி நமக்கு அவசியம் தேவை. அதேசமயம், தோல்விகளும் பிரச்னைகளும் தரும் காயங்கள் நம்மை பலமாக்குகின்றன. அதுவே நமக்கு மனோபலம் தருகிறது. தோல்வியும் துயரமும் இருள் போலச் சூழ்ந்திருக்கும் நேரத்தில், விடிகாலை சூரியன் போல மனதைப் பிரகாசமாக மாற்றுங்கள். வாழ்வில் விடியல் பிறக்கும். எந்த இலக்கையும் அடையும் திறமை கிடைக்கும். ●

● நீங்கள் உங்களை எவ்வளவு அதிகமாக நேசிக்க ஆரம்பிக்கிறீர்களோ, அந்த அளவுக்கு உங்களுக்குள் தன்னம்பிக்கை வேரூன்றும். விரைவாகவே அதன் பயனை நீங்கள் உணர ஆரம்பிப்பீர்கள்.

● கைகுலுக்கும்போது உறுதியாக அடுத்தவரின் கரம் பற்றுங்கள். அது உங்களை தன்னம்பிக்கை உள்ளவராகக் காட்டும்.

● உரையாடலில் அடுத்தவரின் கண்களைப் பார்த்துப் பேசுங்கள். அதில் உங்களின் நேர்மையும் உண்மையும் வெளிப்படும். ‘கண்களைப் பார்த்துப்பேசுபவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்’ என்று நம்பிக்கை உள்ளது.

● யாருடனாவது மனவருத்தம் ஏற்பட்டுவிட்டால் எப்பொழுதும் முதலில் இறங்கிப் போய் பேசி சரி செய்வது நீங்களாக இருங்கள். சண்டை போடுவதைவிட சமாதானம் பேசுவதற்கே அதிக துணிச்சல் தேவை. அது உங்களிடம் இருக்கட்டும்.

● எப்படிப்பட்ட சூழலிலும் துணிச்சலை இழக்காதீர்கள். பயம் உங்கள் தொண்டையை அடைக்கும்போது கூட துணிச்சலுடன் இருப்பது போல் நடிக்கவாவது செய்யுங்கள். இயல்பாகவே அது துணிச்சலாக மாறிவிடும்.

● எல்லா பூட்டுகளும் சாவிகளோடுதான் தயாரிக்கப்படுகின்றன. அது போல எல்லா மோசமான சூழ்நிலைகளும் அதற்கான தீர்வுகளோடுதான் வருகின்றன. ஒருபோதும் கலங்காதீர்கள்.

● உங்களுடன் எப்போதும் இருக்கும் நட்பு வட்டம், உறவுகள், சுற்றத்தார் போன்றவர்களைத் தேர்வு செய்வதில் கவனமாக இருங்கள். ஏனெனில், அவர்களின் கலவையாகவே உங்களின் குணமும் பேச்சும் இருக்கும்.

● நண்பர்களோ, உறவினர்களோ, உடல்நலமில்லாமல் இருந்தால் நேரில் சென்று நலம் விசாரிக்கத் தவறாதீர்கள். மகிழ்ச்சியான தருணங்களைவிட, துன்பமான சூழலில்தான் பலருக்கும் துணை தேவைப்படுகிறது.

● நற்செயல்களைப் பார்க்கும்போது பாராட்ட மறக்காதீர்கள். உங்களுக்கு உதவி செய்வோருக்கு நன்றி சொல்லவும் தயங்காதீர்கள். நன்றியும் பாராட்டுமே இந்த உலகை இனிமையானதாக மாற்றுகின்றன.

● வங்கி வாசலில் நிற்கும் காவலாளி, டீ போட்டுக் கொடுக்கும் மாஸ்டர், அலுவலகத்தை சுத்தம் செய்யும் தொழிலாளி, எல்லோருக்கும் வணக்கம் தெரிவிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள். ஒரு புன்சிரிப்பை அவர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள்.

● தெரிந்தவர்களுக்கு உதவி செய்வது போலவே, அறிமுகம் இல்லாத நபர்களுக்கும் உதவி செய்யத் தயாராக இருங்கள்.

● உங்களிடம் இருக்கும் குறைகளை பிறர் சுட்டிக்காட்டும் முன்பு நீங்களே அறிந்து, அவற்றை சரிசெய்யும் வழிகளைத் தேடுங்கள்.

● தோல்விகளை ஒப்புக்கொள்ள வெட்கப்படாதீர்கள். அப்போதுதான், ‘ஏன் தோற்றோம்’ என உணர முடியும். அதுவே வெற்றியின் படிக்கட்டுகளுக்கு உங்களை இட்டுச் செல்லும்.

● வாழ்க்கை, தொழில், வியாபாரம், பணத் தேவை போன்ற அனைத்துக்கும் முன்கூட்டியே ஒரு செயல்திட்டம் வகுத்துவிடுங்கள். அதன்படி இயங்குங்கள். எதிர்காலம் வளமாக அமையும்.

● தேவைப்படும் நேரங்களில் தயங்காமல் ரிஸ்க் எடுங்கள். வெற்றிவாகை சூடும்போது உங்களிடம் தைரியம் பிறக்கும்.

● உங்களை நீங்கள் நம்புங்கள். ஒருபோதும் அவநம்பிக்கை கொள்ளாதீர்கள். உங்கள் திறமையை நீங்களே நம்பாவிட்டால் வேறு யார் நம்புவார்கள்? நம்பிக்கையே உங்களின் திறமைக்கு அஸ்திவாரம். ●

# தனித்திறன் தரும் பழக்கங்கள்!






WOVEN FABRIC

# RAMRAJ ©

# face mask

**WASHABLE & REUSABLE**


2 LAYER | FIT TO ALL | ANTI DUST | PERFECT FIT | ANTI BACTERIAL | ANTI POLLUTION
UNISEX DESIGN | SOFT ELASTIC EARLOOP | SOFT TOUCH CARBON FINISH FABRIC

MADE IN INDIA

## Special concession for all corporate order.

## Contact : 73730 45147

## shop online @ www.ramrajcotton.in



SHIRT CRAFTED
FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC , SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
Crafted for the comfort
LINEN PARK™
LINEN DHOTIS • SHIRTS • FABRICS
A Premium Product from
RAMRAJ ©
Available at Company Showrooms & All leading Textile Shops




RAMRAJ

LittleStars®

## KURTA SET


RAMRAJ
COTTON
A divine fold for you
Ramyyam®
KOVAI COTTON SAREES

# இவர்கள் மழலை மேதைகள்!

சில குழந்தைகள் வகுப்பில் நன்றாகப் படித்து நல்ல ரேங்க் வாங்குவார்கள். அவர்களை புத்திசாலிக் குழந்தைகள் என்பார்கள். இவர்களைத் தாண்டி தனித்திறனுடன் சில குழந்தைகள் இருப்பார்கள். 'என் வாழ்க்கையில் இப்படி ஒரு திறமைசாலியைப் பார்த்ததில்லை' என ஆசிரியர்களே கூறும் அளவுக்கு பிரகாசமாக இருப்பார்கள் இவர்கள். 'மழலை மேதைகள்' என இவர்களை அடையாளப்படுத்தலாம். மழலை மேதைகளை எப்படிக் கண்டறிவது?

✷ புத்திசாலிக் குழந்தைகள் எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்வார்கள். மழலை மேதைகளோ, ஆசிரியர்களுக்கே பதில் தெரியாத கேள்விகளைக் கேட்பார்கள்.

✷ ஒரு புது ஐடியாவை ஏழெட்டு முறை திரும்பத் திரும்பச் சொன்னதும், புத்திசாலிக் குழந்தைகள் புரிந்துகொள்வார்கள். மழலை மேதைகளுக்கு இரண்டு முறை சொன்னாலே போதும்.

✷ புத்திசாலிக் குழந்தைகள் வகுப்பில் முதல் மாணவராக இருப்பார்கள். மழலை மேதைகளோ தங்கள் வயதில் இருக்கும் எல்லோரையும்விட முதன்மையாக இருப்பார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகளுக்கு பாடத்தில் இருக்கும் எல்லாமே புரிந்துவிடும். மழலை மேதைகளோ, அந்தப் பாடத்தையும் தாண்டி சிந்திப்பார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகள் ஆர்வத்துடன் வகுப்பை கவனிப்பார்கள். மழலை மேதைகளுக்கு, ஆசிரியர் நடத்துவதற்கு முன்பே பாடம் புரிந்துவிடும். அதனால் ஆர்வம் இல்லாமல்தான் வகுப்பில் இருப்பார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகள், வகுப்பில் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருப்பார்கள். மழலை மேதைகளோ, பள்ளியைத் தாண்டி எல்லா இடங்களிலும் கற்றுக்கொள்ள நினைப்பார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகள், தங்கள் வயதில் இருப்பவர்களுடன் நட்பு பாராட்டுவார்கள். மழலை மேதைகளோ, தங்களைவிட வயதில் மூத்தவர்களுடன் பழகுவார்கள். அவர்களின் அறிவுத்தேடல் அங்கே அழைத்துச் செல்லும்.

✷ புத்திசாலிக் குழந்தைகள் எப்போதும் படித்தபடி இருப்பார்கள். மழலை மேதைகளோ குறைந்த நேரம் படித்து, அதிக மதிப்பெண் வாங்கிவிடுவார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகளின் நினைவாற்றல் அபாரமாக இருக்கும். மழலை மேதைகளை உணர்வுத் தூண்டுதலே உயரத்துக்கு அழைத்துச் செல்லும்.

✷ புத்திசாலிக் குழந்தைகள், ஏற்கெனவே இருப்பது போன்ற ஒன்றைக் கச்சிதமாக உருவாக்குவார்கள். மழலை மேதைகள், தங்கள் கற்பனைத் திறன் மூலம் புதுப்புது விஷயங்களை உருவாக்குவார்கள்.

✷ சரியான விடையைச் சொல்லிவிட்டு, புத்திசாலிக் குழந்தைகள் தங்கள் முகத்தில் பெருமித உணர்வைக் காட்டுவார்கள். சில சமயங்களில் தவறும் செய்வார்கள். மழலை மேதைகளுக்கு எல்லாமே சரியாக இருக்க வேண்டும். தவறு நிகழ்ந்தால், கடுமையாக சுய விமர்சனம் செய்துகொள்வார்கள்.

✷ புத்திசாலிக் குழந்தைகள், சராசரி மாணவர்களைவிட கடினமாக உழைப்பார்கள். மழலை மேதைகளோ, ஏதேனும் ஓர் இலக்கு நிர்ணயித்துவிட்டால் அதை அடையும்வரை ஓய்வெடுக்க மாட்டார்கள். ●



ஏதோ இந்தக் கொரோனா புண்ணியத்தில் குழந்தைகள் வீட்டுக்குள் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் பல குழந்தைகளுக்கு தங்கள் பெற்றோரைவிட பிஸியான டைம்டேபிள் இருக்கும். அதிகாலையில் நீச்சல் கிளாஸ், அதன்பின் டியூஷன், பிறகு ஸ்கூல், மாலையில் கராத்தே அல்லது ஏதேனும் விளையாட்டு கோச்சிங் என வார நாட்கள் நகரும். வார விடுமுறைகளில் அபாகஸ், ஸ்போக்கன் இங்கிலீஷ், மூன்றாவது மொழிப் பயிற்சி, இசை, நடனம் என பள்ளி நாட்களைவிட அதிக வகுப்புகள் இருக்கும்.

பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து கவலைப்பட்டு, நிகழ்காலத்தை மறந்துவிடுகிறார்கள். மதிப்பெண்களும், பணம் பண்ணும் வித்தைகளும் மட்டுமே பல பெற்றோர்களுக்கு திறமைகளாகத் தெரிகின்றன. ‘நான் எல்லோரையும்விட வேகமாக ஓடுவேன்’, ‘சூப்பராக வண்ணம் தீட்டுவேன்’, ‘எனக்கு அழகாக அலங்கரிக்கத் தெரியும்’, ‘ஒரு செல்போனை முழுசாகப் பிரித்துப்போட்டு திரும்பவும் பொருத்த எனக்குத் தெரியும்’ என்று குழந்தைகள் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் தனித்திறமையே! அதை கவனிக்கும் கண்கள்தான் பெற்றோருக்கு இருப்பதில்லை.

ஒரு குழந்தையின் தனித்திறனை வளர்ப்பதற்கு பெற்றோர்கள் செய்ய வேண்டியவை என்னென்ன?

✸ பெரும்பாலான குழந்தைகள் தங்களுடைய 2 வயதில், சின்னச் சின்ன செயல்பாடுகளின் மூலம் குறிப்பிட்ட விஷயத்தில் தனித்தன்மையைத் வெளிப்படுத்தத் தொடங்குவார்கள். தாளத்துக்கு ஏற்ப ஆடும் ஒரு குழந்தைக்குள் நடனக் கலைஞர் ஒளிந்திருக்கலாம். பாடல்களின் ராகங்களைக் கண்டுபிடிக்கும் குழந்தைக்குள் ஓர் இசை மேதை இருக்கலாம். எதைப் பார்த்தாலும் அதன்மீது ஏறிச்செல்ல ஆசைப்படும் குழந்தைக்குள் ஒரு மலையேற்ற வீரன் இருக்கலாம். பிளாஸ்டிக் கட்டங்களை வைத்து உருவங்களை உருவாக்கும் ஒரு குழந்தை, கட்டிடக் கலைஞராக ஆசைப்படலாம். இப்படிக் குழந்தை ஆர்வம் காட்டும் செயல்களைத் தொடர்ந்து கண்காணித்து அறிந்துகொள்ளுங்கள்.

✸ ‘சக குழந்தைகளிடமிருந்து என்னைப் பிரித்துக் காட்டுவது இந்தத் திறமைதான்’ என்று குழந்தை தன் இப்படிப்பட்ட செயல்களால் உணர்த்துகிறது. ‘இதுதான் என் தனித்தன்மை. மற்றவர்களைவிட இதை நான் சிறப்பாகச் செய்வேன். வாழ்வில் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் நான் சாதிக்க விரும்புகிறேன்’ என்று குழந்தை காட்டுகிறது.

✸ குழந்தை இப்படி ஏதேனும் ஒரு செயல்பாட்டைத் தொடரும் பட்சத்தில், ‘‘செல்லம், உங்களுக்கு நடனம் கத்துக்க ஆசையா? ஓவியம் வரையப் பிடிக்குதா? இதுக்காக ஒரு வகுப்பில் சேர்த்துவிடவா?’’ என்று கேளுங்கள். குழந்தை எந்தத் திறனை வெளிப்படுத்துகிறதோ, அது தொடர்பான பயிற்சி தரும் இடத்துக்கு அழைத்துச்சென்று அறிமுகப்படுத்திப் பாருங்கள். குழந்தை அதில் ஆர்வம் காட்டுகிறதா, அச்சம் அடைகிறதா என உற்றுநோக்குங்கள். குழந்தை திரும்பத் திரும்ப அங்கே போவதற்கு ஆர்வம் காட்டினால்,



# உங்கள் குழந்தையும் ஆல்ரவுண்டர்தான்!



அது குழந்தைக்குப் பிடிக்கிறது என்று அர்த்தம்.



✸ குழந்தை தன் வயதுக்கே உரிய குறும்புத்தனம் காட்டலாம். அதைப் புரிந்துகொண்டு கையாளும் ஒரு பயிற்சியாளரிடம் கூட்டிச் செல்லுங்கள். புதிதாக ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்வதற்காகவே அங்கு சேர்க்கிறீர்கள். அதில் ஜெயிப்பது மட்டுமே நோக்கமில்லை என்பதைக் குழந்தைகளுக்குப் புரியும்விதத்தில் சொல்லுங்கள்.

✸ புதிதாக ஒன்றைக் குழந்தைக்குக் கற்றுக்கொடுக்க முடிவெடுக்கும் முன்பு, குழந்தையின் உடல் ஆரோக்கியம், பள்ளிக்கூட நேரம், பாடத்திட்டம், குழந்தையின் ஆர்வம், குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் அனைத்தையும் அலசிப் பார்த்து முடிவெடுங்கள்.

✸ குழந்தையின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு உதவுவதற்குத்தான் இந்த வகுப்புகளே தவிர, வதைக்க அல்ல. 'இதுக்காக நிறைய ஃபீஸ் கட்டியாச்சு. நீ போய்த்தான் ஆகணும்' என வற்புறுத்தாமல், அவர்களை இயல்பாக இருக்கவிடுங்கள். அவர்களின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டால் போதும், அவர்களே உற்சாகமாகச் செயல்படத் தொடங்குவார்கள்.

✸ பாட்டு, நடனம், இசைக்கருவிகள் வாசித்தல், தற்காப்புக் கலைகள் போன்ற வெகுசில திறமைகளே ஊடகங்களால் பெரிய அளவில் அங்கீகரிக்கப்படுகிறது. இவற்றில் ஆர்வம் காட்டாத குழந்தைகள் சாதிக்க முடியாது என்ற எதிர்மறை எண்ணம் பல பெற்றோர்களுக்கு இருக்கிறது. தனித்திறன்கள் ஏராளமானவை. எல்லாமே சமமான முக்கியம் உள்ளவைதான். பிடிக்காத ஒரு விஷயத்தில் குழந்தையைத் தள்ளாமல், உங்கள் குழந்தையின் திறனை ஊக்குவிப்பது அவசியம்.

✸ தனித்திறனை வெளிப்படுத்துவதில் ஒவ்வொரு குழந்தைக்கும் வயது வேறுபாடு இருக்கும். உங்கள் குழந்தையை மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடாதீர்கள். சில குழந்தைகள் மூன்று வயதிலேயே திறமை காட்டலாம்; சில குழந்தைகளிடம் தனித்திறன் 10 வயதிலும் வெளிப்படலாம். பொறுமையாகக் காத்திருங்கள்.

✸ குழந்தைகளுடன் அவர்களின் தனித்திறன் பற்றி அவ்வப்போது உரையாடுங்கள். அவர்களின் சின்னச்சின்ன சாதனைகளையும் கொண்டாடுங்கள். 'இந்த நடன அசைவு கடினமானது, இதை சீக்கிரமே நீ கற்றுக்கொண்டாய்' என்று பாராட்டினால், குழந்தை இன்னும் ஆர்வம் காட்டும்.

✸ என் குழந்தை எந்தக் கூடுதல் வகுப்புக்குச் சென்றாலும் ஆர்வமே காட்டுவதில்லை என்று ஆதங்கப்படும் பெற்றோர்கள் உண்டு. அப்போதைக்கு குழந்தையைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுங்கள். வளர வளர நண்பர்களின் ஊக்கத்தாலோ, சக மாணவர்களின் செயல்களைப் பார்ப்பதாலோ, ஆசிரியர்கள் மூலமோ அவர்களுக்குள் ஆர்வம் வரக்கூடும்.

✸ கைரேகைகள் போலவேதான் ஒவ்வொருவரின் திறமைகளும். ஒருவருக்கு இருப்பது போல இன்னொருவருக்கு இருக்காது. எல்லோருமே சராசரியாக நான்கைந்து தனித்திறமைகளுடன்தான் பிறக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட திறமையைக் கண்டுபிடித்து, அந்த திசையில் முன்னேறுவதற்கு உங்கள் குழந்தையை நீங்கள்தான் வழிநடத்த வேண்டும்.

✸ 'மற்றவர்களுக்கு இல்லாத ஒரு தனித்திறமை எனக்கு இருக்கிறது' என்று ஒரு குழந்தை உணர வேண்டும். குழந்தைக்கு அதை உணர்த்தும் பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது.

✸ 'எல்லாவற்றிலும் நம் குழந்தையே பரிசை அள்ளி வர வேண்டும்' என நினைக்காதீர்கள்; சில விஷயங்களைப் புதிதாகக் கற்றுக்கொள்வதுகூட ஒருவகையில் சாதனைதான். அவர்களின் குழந்தைப் பருவத்துக்கு மதிப்பு அளித்து, அவர்கள் விரும்புவதைச் செய்ய வழிகாட்டுங்கள். உங்கள் குழந்தையும் ஆல்ரவுண்டர் ஆகும்! ●



# ஜப்பானின் வெற்றி ரகசியம்!

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா அணுகுண்டு வீசி சிதைத்த குட்டி தேசம் ஜப்பான். பெரிதாக இயற்கை வளங்கள் இல்லாத அந்த தேசம், பேரழிவுக்குப் பிறகு கம்பீரமாக உயர்ந்து வல்லரசு ஆனது. இன்றும் ஜப்பானியத் தயாரிப்புகளுக்கு உலகம் முழுக்க மதிப்பு உண்டு. இப்படி ஜப்பான் தனித்துவமாக செயல்பட்டு பெற்ற வெற்றிக்குக் காரணம், '5 எஸ்' எனப்படும் முறை. பல முன்னணி நிறுவனங்கள் இதைப் பின்பற்றி உயர்ந்துள்ளன.

எந்த நிறுவனத்திலும், எந்த அமைப்பிலும் தனித்திறன், உற்பத்தி, லாபம், சேவை மற்றும் பாதுகாப்பு போன்ற அனைத்து அம்சங்களிலும் உயர்வதற்கு அடிப்படையாக உதவுவது 5 எஸ் கோட்பாடு. செய்ரி (Seiri), செய்டன் (Seiton), செய்சோ (Seiso), செய்கெட்சு (Seiketsu), சிட்சுகெ (Shitsuke) ஆகியவையே அந்த ஐந்து 'எஸ்'கள்.

✷ 'செய்ரி' என்றால் 'பிரித்தல்' என அர்த்தம். ஓர் இடத்தில் குவிந்திருக்கும் பொருட்களில் தேவையில்லாதவற்றைப் பிரித்து அகற்றினால், தேவையானதை உடனே எடுக்க முடியும். இடமும், தேடும் நேரமும் மிச்சமாகும். தடைகள் இல்லாததால் பாதுகாப்பும் அதிகரிக்கும். மனதிலும் தேவையற்ற சிந்தனைகளை விரட்டினால், தேவையான விஷயங்கள் பற்றி மட்டுமே யோசித்து முன்னேற முடியும்.

✷ 'செய்டன்' என்றால், ஒழுங்குபடுத்துதல் என அர்த்தம். பயனற்ற பொருட்களை நீக்கிய பின்னர், தேவையான பொருட்களை ஒழுங்குமுறையுடனும் அடுக்கி வைக்கவேண்டும். மின்கம்பத்தில் ஏறும் ஊழியர் ஒருவர், தனக்குத் தேவையான கருவிகளை இடுப்பில் செருகிக்கொண்டு ஏறுவார். அப்படி எந்த வேலைக்கு எது அவசியமோ, அது அங்கே இருக்க வேண்டும். இப்படிச் செய்தால், திடீரென பொருட்கள் தீர்ந்து போகும் கஷ்டமும் வராது. தேவைக்கு அதிகமாக எதையும் வாங்கி பணத்தை வீணடிக்கவும் மாட்டோம்.

✷ 'செய்சோ' என்றால் தூய்மையாக வைத்திருப்பது என அர்த்தம். பணிபுரியும் இடத்தையும் பொருட்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். முறையாக இதைச் செய்தால், எதுவும் வீணாகாது, தவறுகள் நேராது, வேலையும் திறமையாகவும் பாதுகாப்பாகவும் நடக்கும்.

✷ 'செய்கெட்சு' என்றால் நிலைப்படுத்துதல் என்று அர்த்தம். தேவையில்லாதவற்றை அகற்றுவது, தேவையான பொருட்களை முறைப்படுத்துவது, உரிய இடைவெளியில் சுத்தம் செய்வது ஆகிய மேலே சொன்ன மூன்று நடைமுறைகளையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து இவற்றைச் செய்வது போல நடைமுறைகளை முறைப்படுத்த வேண்டும். தரமான செயல்பாட்டை உறுதி செய்ய இது அவசியம்.

✷ 'சிட்சுகெ' என்றால் தொடர்ச்சியாகச் செய்வது என்று அர்த்தம். மேலே சொன்ன நடைமுறைகளை ஒரு நிறுவனத்தின் நிலையான செயல்பாடாக மாற்றிவிட்டால் போதும், யாரும் சொல்லாமலே எல்லோரும் இதைப் பின்பற்றுவார்கள். அவ்வப்போது பயிற்சி தருதல், கண்காணித்தல், தேவைப்படும் நேரங்களில் மாற்றங்களைச் செய்தல், ஒரு பிரச்னை ஏற்படும்போது அது திரும்பவும் ஏற்படாதபடி தீர்வு தேடுதல் என இந்த நடைமுறைகள் தொடர வேண்டும்.

உற்பத்தித் துறையில் மட்டுமே பயன்பட்ட இந்த 5 எஸ் மந்திரம், இப்போது மருத்துவம், கல்வி, அரசு நிர்வாகம் என எல்லா துறைகளுக்கும் பொருந்துகிறது. வீடுகளும் இதைப் பின்பற்றினால் முன்னேறும். ●



# சாதாரண வேலை இல்லை!

அப்பா நைட் டியூட்டி முடித்துவிட்டு அறைக்குள் படுத்திருந்தார். அம்மா சமைத்துக்கொண்டிருந்தார். மகன் மகேஷ் தன் நண்பர்களுடன் ஹாலில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தான். கல்லூரி படிக்கும் அவனுக்குப் பல நண்பர்கள்.

எல்லோரும் தங்கள் அப்பாவின் வேலை மற்றும் அதில் இருக்கும் கஷ்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். டாக்டர், எஞ்சினியர், தொழிலதிபர், கடை உரிமையாளர் என அந்த நண்பர்களின் அப்பாக்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள். அவர்கள் பேசப் பேச, மகேஷ் தன் பேச்சைக் குறைத்துக்கொண்டான். அவர்களில் ஒரு நண்பன், ''உங்க அப்பா என்ன செய்யறாரு மகேஷ்?'' என்று கேட்டான். மகேஷ் மெல்லிய குரலில், ''அவர் ஒரு ஃபேக்டரியில மெக்கானிக்கா இருக்காரு. சாதாரண தொழிலாளி'' என வெறுப்பாகச் சொன்னான்.

அறையில் படுத்திருந்த அப்பா தூங்குகிறார் என அவன் நினைத்தான். ஆனால், அவர் விழித்திருந்தார். மகன் இப்படிச் சொல்வதைக் கேட்டதும் அவருக்குக் கண்கள் கலங்கின. 'நாம் பெரிய வேலையில் இல்லாததால் மகனுக்கு அந்தஸ்து குறைகிறதே' என வருத்தப்பட்டார். அம்மாவுக்கும் இது கேட்டது.

மகனின் நண்பர்கள் போகும்வரை காத்திருந்தார். போனதும் மகனிடம் வந்தார். ''மகேஷ், உங்க அப்பா ஒரு சாதாரண தொழிலாளி என்று உன் நண்பர்களிடம் சொன்னாய். அது சரிதான். அதன் உண்மையான அர்த்தம் உனக்குத் தெரியவில்லை என்று நினைக்கிறேன். நான் விளக்குகிறேன். பெரிய அதிகாரிகள், தலைமை நிர்வாகிகளாக இருப்பவர்கள் போன்றவர்கள் ஏ.சி அறைகளில் அமர்ந்தபடி திட்டம் தீட்டுகிறார்கள். முடிவுகளை எடுக்கிறார்கள்.



அதையெல்லாம் செயல்படுத்துவது உன் அப்பாவைப் போன்ற சாதாரணத் தொழிலாளிகள்தான். மிகப்பெரிய மனிதர்கள் காணும் கனவுகளை எல்லாம் நிஜமாக்குவது சாதாரணத் தொழிலாளர்களின் உழைப்புதான்.

உடைகள் முதல் உணவுப்பொருட்கள் வரை அவர்கள் தொழிற்சாலைகளில் உருவாக்கி அனுப்பும் எல்லாம்தான் நம் வாழ்க்கை இயல்பாக நடைபெற உதவுகின்றன. அதிகாரிகள் எட்டிப் பார்க்காவிட்டாலும் தொழிற்சாலைகள் இயங்கும். இயந்திரங்கள் ஓடும். ஆனால், தொழிலாளர்கள் இல்லாமல் எதுவும் நடக்காது.

சாதாரண தொழிலாளர்கள் வேலை செய்யாவிட்டால் நம் வீட்டுக் குழாயில் தண்ணீர் வராது; வீதிகள் சுத்தமாகாது; பேருந்துகளும் ரயில்களும் ஓடாது; பெரிய பெரிய கடைகளுக்கு எந்தப் பொருட்களும் வந்து இறங்காது; கட்டிடங்களைக் கட்ட முடியாது; விவசாயம் செய்ய முடியாது; ஒரே ஒரு குண்டூசிகூட தொழிற்சாலையில் உருவாகாது. சாதாரணத் தொழிலாளி என்று மதிப்பு குறைவாக யாரையும் நினைக்காதே'' என்று சொல்லி முடித்தார் அம்மா.

மகன் அமைதியாக தந்தையின் அறைக்குப் போனான். கண்ணீருடன் அவரைக் கட்டிக்கொண்டான். ''என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா. உங்களின் மதிப்பை நான் புரிந்துகொண்டேன். நீங்கள் சிறப்பான மனிதர், பெரிய பெரிய வேலைகளைச் செய்து முடிப்பவர். உங்களை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்'' என்றான்.

# ட்விட்டர் தனித்திறன்

## @Sumi_twitz

தன்னைத் தீண்டியவர்கள் எல்லோரையும் பேதங்கள் பார்க்காமல் ரசிக்கச் செய்வது தான் புத்தகத்தின் தனித்திறன்!

## @Sathyakris26

தனித்திறன் ஆற்றலே கல்வி!

## @little_heartsss

மனசுல பாரத்தைத் தேக்கி வச்சிக்கிட்டு, அடுத்தவங்க பார்வைக்கு நல்லாயிருக்கிற மாதிரி நடிப்பதற்கு தனித்திறன் அவசியம். அதில் ஆஸ்கர் வாங்கியவர்கள் பெண்கள்.



## @Abukathija

வெளிய சொல்லமுடியாத வலியை தனக்குள்ளே அடக்கி ஆள்வதில் ஆண்கள் தனித்திறமை வாய்ந்தவர்களே!

## @5prabal

எவ்வளவு உயரிய தனித்திறன் பெற்றவராயினும், கட்டுப்பாடுகளை ஏற்காத எவரும் சிறந்த மனிதராக இருந்ததில்லை, இருக்கவும் இயலாது.

## @Anbu_twitz

முகம் அழகில்லை என வருந்தும் மனிதப் பூக்கள் அவர்களுக்குள் இருக்கும் தனித்திறன் தான் அழகென உணர மறந்துவிடுகிறார்கள்!


## @jega2weets

அனைத்திலும் அரைகுறை திறன்பெற்று புத்திசாலியாய் இருப்பதை விட, ஒன்றில் தனித்திறன் பெற்று முட்டாளாய் இருப்பதே சிறந்தது.



## @Samaniyantweet

தனித்திறன் என்பது செயல் அல்ல, அது ஒரு பழக்கம்.



## @raajiangel

பேச்சுத் திறன் என்பது மிகச் சிறப்பு வாய்ந்தது. பேச்சுத் திறன் என்பது மற்ற சிறப்புகளுக்குள் அடங்கியது அல்ல. அது ஒரு தனித்திறன்.

## @thala_shivaa

தனித்திறமை என்பது நிரூபிக்கப்பட உண்மையும் உழைப்பும் உன்னிடம் ஒட்டி இருத்தல் வேண்டும்!

## @pro_guna

படிப்பு என்பது கல்வியறிவு, தனித்திறமை, கலைத்திறமை, தைரியம் மற்றும் தன்னம்பிக்கை. வெறும் பாடத்திட்டங்கள் மட்டும்தான் அறிவு என்றும், கல்விக்கூடங்களில் அரைத்த மாவுகள்தான் பேரறிவு என்றும் இருந்தால் இங்கு எல்லாமும் பறிக்கப்படும்.



## @SivaChitradev

செல்வம் என்பது பணம் மட்டும்தான் என்பது இல்லை. உனக்குள் இருக்கும் திறமையை நீ வளர்த்துக் கொண்டால், அதுவும் ஒரு செல்வம்தான்.

## @agal2020

யாராலுமே சிந்திக்க முடியாத ஒரு கோணத்தில் அணுகுவது என்பது ஒரு தனித்திறமை.

## @iampadithurai

விடாமுயற்சி என்பது தோல்வியைக் கண்டு அஞ்சாதோருக்கான தனித்திறமை.

## @kokilahkb

புரிந்து கொள்ளுதல் என்பது தனித்திறமை அல்ல. அது அவரவர் சக்திக்கு உட்பட்ட விருப்பமே!

## @umakrishh

யாரும் யாருடைய இடத்தையும் நிரப்ப முடியாது. தனக்கென ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொள்வதே தனித்திறன்.

## @nancy_viji

தனித்திரு. தோல்வியிலும் திறன் தெரியும். வெற்றிக்கும் வழி பிறக்கும்.



## @naadodi_

கோதுமை தோசை ஊத்த தனித்திறமை வேணும். பதமா மாவு கலக்குறது, லாவகமா சட்டில ஊத்தி இழுக்குறது, பொறுமையா வேக விடுறது, பிஞ்சுடாம திருப்பிப் போடுறதுன்னு ஒவ்வொரு கட்டத்திலும் தனித்திறன் தேவைப்படும்.

## @itz_sajina

ஓரிடத்தில் வாயாடியாகவும், மற்றோரிடத்தில் பரம சாதுவாகவும் தன்னைத் தானே நிலைநிறுத்தும் நுட்பமெல்லாம் பெண்களுக்கு மட்டுமேயான தனித்திறன்!

## @Abukathija

எல்லோரும் இங்கே தனித்திறமை வாய்ந்தவர்கள்தான், மற்றவர்களுடன் ஒப்பிட்டு இழிவுபடுத்தாத வரை!

## @selvachidambara

எவ்வளவு இயல்பான ஒரு கருத்து:

என்னிடம் சிறப்பான தனித்திறமை என்று எதுவுமே இல்லை. என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே!

-ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

## @imparattai

தனித்திறமை உள்ள ஒருவரை நீங்கள் உற்சாகப்படுத்தவோ, ஊக்கப்படுத்தவோ, உதவி செய்யவோகூட வேண்டாம், அவர்களை மட்டம் தட்டாமல் இருங்கள்.

## @Lachu_Twitz

ஒவ்வொரு குழந்தையிடமும் ஏதோ ஒரு தனித்திறமை இருக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவது, அன்னையின் வளர்ப்பில் இருக்கிறது.

## @Kannan_Twitz

ஒருவருக்கு தனித்திறமை இல்லாவிட்டால், எந்தப் பின்னணியும் சிபாரிசும் எடுபடாது.

## @star_nakshatra

தோல்விகளைக் கண்டு சோர்ந்து போகாமல், அந்தத் தோல்வியையே வெற்றியாக மாற்றுவதில்தான் உங்களது தனித்திறமை இருக்கிறது.

## @MrMarmaYogi

மழலைகளை சந்தோஷப்படுத்துவதும் அவர்கள் மொழியைப் புரிந்துகொள்வதும் ஒரு தனித்திறமை. அது எல்லோரிடமும் இருப்பதில்லை, அம்மாவைத் தவிர!



## @PriyaaBM

உங்கள் படிப்பு, வேலை, தனித்திறமை எதுவுமே சிறந்தது அல்ல என மட்டம் தட்டிப் பேசுபவர்கள் தலையில் ரெண்டு தட்டு தட்ட முடியலைன்னாலும் பரவாயில்லை. அப்படிப்பட்ட மனுஷங்களை விட்டு தள்ளியே இருங்கள். நம்மை நாமே குறைத்து மதிப்பிட வைத்து, சுயபரிதாபத்துக்குள் தள்ளிவிட்டுட்டுப் போயிடுவாங்க.



# தனித்திறன் பெறுங்கள்!

✸ ஏதோ ஒரு வகையிலோ, சில வகைகளிலோ, திறமைசாலியாக நீ இருக்கலாம் அல்லது அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கலாம். உன் திறமைக்குக் கடந்த கால மனித இனத் தொடரும் இக்காலச் சமுதாயத் தொடரும் ஆதாரம் என்பதை மறந்துவிடாதே. இந்த உணர்வு உன் திறமை குறையாமல் பாதுகாக்கும். கடமையிலே உன்னை உயர்த்தும், உனது திறமையை மேலும் மேலும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு துறையிலும் நீ அடைந்துள்ள உயர்வைவிட அதிகமான உயர்வை அடைந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதையும் மறந்துவிடாதே. சந்தர்ப்பம் கிடைக்கும்போது, உன்னைவிடத் திறமைசாலிகளைப் பாராட்டு. உன் போல திறமையில் முன்னேற ஆர்வம் காட்டுபவர்களை உற்சாகப்படுத்து. அது உன் திறமைக்கு சிறப்பு சேர்க்கும்.




✸ ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவுண்டு. அந்த விளைவிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஒவ்வொருவரும் தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு நேராவண்ணம் நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அமைதியும், இன்பமும் ஏற்படும். அறிவு வளர்ச்சிக்கும் வழி ஏற்படும். தீமையைத் தவிர்த்து நல்லதே செய்ய நாம் பழகிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குத்தான் ஒழுக்கம் என்று பெயர்.

பிறர்க்கு எவ்வகையிலும் தீமை ஏற்படாதபடி எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு வாழ்வதுதான் ஒழுக்க வாழ்வு ஆகும். மற்ற எல்லாம் இழுக்கான வாழ்வாகிய துன்பத்தையே தான் கொடுக்கும். செய்யும் செயல்களின் விளைவு அறிந்து, இன்பம் தரும் நற்செயல்களிலேயே ஈடுபட வேண்டியது அவசியம்.

✸ சிக்கனம், சிந்தனை, சீர்திருத்தம். இதில் சிக்கனத்தை முதலில் வைத்திருக்கிறேன். சிந்தனையை அடுத்து வைத்திருக்கிறேன்.

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**

ஆகவே, இந்த முறையிலே அந்தச் சிக்கனம், சிந்தனை, சிறந்த பண்பு, சீர்திருத்தமுடன் வாழ்வு, துணிவு இவை வேண்டும். குடும்பத்தில் ஒருவர் மட்டும் சிக்கனம், சிந்தனை, சீர்திருத்தம் என்று இருந்தால் போதுமா? போதாது. இதை உணர்ந்து ஒத்துக் கொள்ளக் கூடிய இருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் குடும்பத்திலே அமைதி இருக்கும். சீர்திருத்தம் பரவ முடியும், சிக்கனம் நிலைக்க முடியும், நலம் பெற முடியும்.

✸ மருத்துவம் என்பது நோய் வந்த பிறகு தீர்ப்பது மட்டுமல்ல. நோயே வராமல் காப்பதும்தான். நோய் என்றால் என்ன? இயற்கையாக நம்முடைய உடல் நலமாக இருப்பதற்கு ஏற்ற எல்லாம் அமைந்து இருக்கிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற குறையைக் கூட சரிசெய்கிற அளவுக்கு இயற்கையின் ஆற்றல் நம் உடலிலே இருக்கிறது. நம்முடைய உடலிலே ஒவ்வொரு செல்லும் ஒரு ரசாயனச் சாலையாக வேலை செய்து கொண்டு இருக்கிறது. நாம் அதைக் கெடுக்காமல் இருந்தால் போதும்.

பெற்றோர்கள் எப்படிப்பட்ட மனம், உடல் அமைப்பிலே இருக்கிறார்களோ அப்படித்தான் ஒரு குழந்தை உருவாக முடியும். மரத்தை ஒட்டித்தான் விதை இருக்கும். அந்த விதையை ஒட்டித்தான் மரம் இருக்கும். இது தொடர் நிகழ்ச்சி. குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், பெற்றோர்கள் நல்ல உடல் மற்றும் மன நலம் உள்ளவர்களாக அமைய வேண்டும். பெற்றோர்களிடையே ஒருவருக்கு ஒருவர் பிணக்கு, மனத்தாங்கல் இருக்குமேயானால், அது குழந்தைகளையும் பாதிக்கும். ஆகவே, மனநலமும், உடல் நலமும் காத்து இனிமை காப்போம்.

✸ உணவு சுவையாக உள்ளது என்று மேலே மேலே சாப்பிட்டுக் கொண்டே போனால் இன்றைக்கு வயிற்று வலி, நாளைக்கு வயிற்றுப் போக்கு என்றாகும். டாக்டரிடம் போனால் நோய்க்கு மருந்து கொடுப்பார். குணமான மறுகணமே மீண்டும் அளவுக்கு அதிகமான உணவு நாடிப் போனால், வாழ்நாள் முழுவதும் வயிற்றுக்கோளாறு என்ற நிலை ஏற்பட்டால் வாழ்க்கை என்ன ஆகும்? வேறு எந்தக் காரியத்தை நீங்கள் கவனிக்க முடியும்?

சாப்பிடுவதை ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். அதேபோல் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டால், உடல் வலுவிழந்து போகிறது, உடல் கெட்டால், மனம் கெட்டால், வாழ்வும் சீரழிகிறது. நாம் கெடுகிறோம், குடும்பம் பாதிக்கப்படுகிறது, சமுதாயம் தப்புவதில்லை.

ஐயுணர்வோடு மெய்யுணர்வு இணையும்போது உங்களுக்கு உறவிலே ஒரு தெளிவு வரும். அதாவது, ஒட்டியும் ஒட்டாமல் இருக்கும் நிலை. இதுதான் உறவிலேயே துறவு நிலை. இது அல்லாது துறவு நிலை என்று தனியாக ஒன்று இருக்கவே முடியாது. அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போவதுதான் துறவு என்றால், இறப்பவர்கள்தான் துறவு நிலைக்குப் போகிறார்கள் என்று சொல்லலாம்.

வாழும்போதே வாழ்வு நலமாக, அமைதியாக, மகிழ்ச்சியாக அமைய வேண்டுமே தவிர, நாம் இறந்தபிறகு துறவானால் என்ன, எதுவானால் என்ன? வாழும்போதே வாழ்வு திருப்தியாக, மேன்மையாக இருக்க வேண்டும் என்றால், ஒவ்வொரு அனுபோகத்திலேயும் எல்லை நிர்ணயிக்க வேண்டும். எதிலும் அளவு வேண்டும். ●


வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 6 இதழ் 2

ஆகஸ்ட் 2021

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com





இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# கல்வியால் தனித்திறன் பெறுங்கள்!





எஞ்சினியரிங்கில் வெறும் ஐந்தே பிரிவுகள் இருந்த காலம் ஒன்று உண்டு. தமிழ்நாடு முழுக்க பத்துக்கும் குறைவான கல்லூரிகள்தான் இருந்தன. இன்று நூற்றுக்கணக்கான பிரிவுகள், சுமார் 500 கல்லூரிகள். முன்பு பி.காம் என்றால் ஒரே ஒரு பட்டப்படிப்புதான். இன்று அதிலேயே பிரிவுகள் வந்துவிட்டன. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் ‘வானமே எல்லை’ என்று கூறும் அளவிற்கு கல்வி, வேலை மற்றும் தொழில் வாய்ப்புகள் பரவிக் கிடக்கின்றன. ஆனால், ‘இந்தப் படிப்புதான் உயர்வானது’, ‘இதைப் படித்தால்தான் வேலை கிடைக்கும்’ என குறிப்பிட்ட சில துறைகளுக்கு மட்டுமே போட்டி இருக்கிறது. எதைப் படித்து எப்படி தனித்திறன் பெறுவது?

✸ எந்தப் படிப்பை, எந்தக் கல்லூரியில் படித்தால் அதிக சம்பளத்தில் நல்ல வேலை கிடைக்கும் என்று பார்த்து உயர்கல்வியைத் தேர்வு செய்யக்கூடாது. மாணவரின் குடும்ப, சமூக மற்றும் பொருளாதாரச் சூழல், குறிப்பிட்ட உயர்கல்வியில் சேர்வதற்கான தகுதி, அந்தப் படிப்பை முடித்த பிறகு உள்ள மேற்படிப்பு வாய்ப்புகள், வேலைவாய்ப்புகள், சுயமாகத் தொழில் தொடங்கி நடத்துவதற்கான வாய்ப்புகள் போன்ற எல்லாவற்றையும் பரிசீலிக்க வேண்டும்.

✸ பறவைக்கு வானத்தில்தான் பலம், முதலைக்குத் தண்ணீரில்தான் பலம். ஒவ்வொருவரின் தனித்திறன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற படிப்பைத் தேர்வு செய்ய வேண்டும். அவரவருக்கு விருப்பமான துறைகளில் படித்தால், வாழ்வில் மிகச் சிறப்பாக வர முடியும். வாழ்வில் வெற்றி என்பது வேலைவாய்ப்புள்ள துறையைத் தேடுவதில் இல்லை. விருப்பமான துறையில், அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதில்தான் உள்ளது.

✸ யாரோ சொல்கிறார்கள், பக்கத்து வீட்டுப் பையன் படிக்கிறான் என்றெல்லாம் காரணம் பார்த்து உயர்கல்வியைத் தேர்வு செய்யக்கூடாது. இந்தியாவில் விமானம் உருவாக்கும் நிறுவனங்களே அநேகமாக இல்லை. ‘ஏரோநாட்டிகல் எஞ்சினியரிங் படித்தால் வேலை கிடைக்கும்’ என்று யாரோ சொல்வதை நம்பி சேர்ந்துவிடக்கூடாது. அதை முடித்தால் இந்தியாவில் வேலை கிடைப்பதும் சிரமம்; அதை முடித்துவிட்டு வேறு வேலைகளுக்குப் போவதும் சிரமம்.

✸ கணிதம் என்றாலே கசக்கிறது என்று சொல்லும் ஒருவர் எஞ்சினியரிங் பக்கம் வந்தால் சிரமப்படுவார். வித்தியாசமாக சிந்திக்கும் திறன் இல்லாத ஒருவர்,

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவது சிரமம். ஒவ்வொன்றுக்குமான அடிப்படைத் திறன்களை கவனிக்க வேண்டும்.

✸ மருத்துவம், எஞ்சினியரிங் என்றில்லை, பொருத்தமாகத் தேர்வு செய்து படித்தால் பி.ஏ படித்தவர்கள் கூட லட்சங்களில் சம்பாதிக்க முடியும். 'ஹ்யூமானிட்டிஸ்' என்று அழைக்கப்படுகிற இவ்வகைக் கலைப் படிப்புகள், ஒருவரை எல்லா சூழல்களுக்கும் பொருந்துகிற மனிதனாக மாற்றுகிறது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வேலைக்கும், அதற்கேற்ற படிப்பு படித்தவருக்கு முன்னுரிமை கிடைக்கும். மற்றவை எல்லாம் வேண்டாத படிப்புகள் அல்ல. அந்தக் குறிப்பிட்ட பணிக்குப் பொருந்தி வராதவை, அவ்வளவுதான்.

✸ வெறும் படிப்பும் பட்டமும் மட்டுமே வேலைவாய்ப்பு தந்து விடாது. ஒரு நேர்முகத் தேர்வுக்கு நூறு பேர் வருகிறார்கள் என்றால், அனைவரும் ஒரே பட்டப்படிப்பு தகுதி வைத்திருப்பார்கள். கல்வித் தகுதியின் அடிப்படையில் யாரையும் குறைத்து மதிப்பிட முடியாது. விண்ணப்பிக்கிற பணி சாா்ந்து கூடுதல் அறிவும் ஆா்வமும் அனுபவமும் இருக்கும் ஒருவா்தான் மற்றவா்களை முந்திச் செல்ல முடியும். அவர்களின் பட்டமானது, விண்ணப்பம் அனுப்புவதற்கான குறைந்தபட்சத் தகுதியை மட்டுமே வழங்கும்.

✸ கல்லூரியில் கற்பதுடன் படிப்பு முடிந்துவிடுவதில்லை. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் புதுப்புது விஷயங்கள் வேகமாக அறிமுகமாகின்றன. அந்த வேகத்துடன் ஒப்பிடும்போது, பாடநூல்கள் பல ஆண்டு பின்தங்கியுள்ளன. பாடநூல்களைத் தாண்டி தொழில் மற்றும் வேலை சார்ந்து தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

✸ கம்ப்யூட்டர் துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்துவிட்டதாகப் பலரும் புலம்புகிறார்கள். ஆனால், கவலைப்படும் அளவுக்கு அது குறையவில்லை. இப்போதும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் தருவது அந்தத் துறையே. நிறுவனங்களின் தேவை என்ன என்பதை அறிந்து, அதற்கேற்ப தம்மை வடிவமைத்துக்கொள்கிற எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது. உலக அளவில் என்னென்ன மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். அதற்கு ஏற்றபடி தம்மைத் தயார்படுத்திக்கொள்ளும் எவருக்குமே வாய்ப்புகள் இருக்கும்.

✸ விற்பனைத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் எவருக்கும் பேச்சுத்திறன் அடிப்படையாக வேண்டும். ஒரு சாதாரண பொருளைக்கூட தன் பேச்சுத்திறனால் ஒருவர் விற்றுவிட முடியும் என்றால், அவருக்குத்தான் அங்கே வாய்ப்புகளும் முன்னேற்றமும் விரைவாக வரும்.



✸ உற்பத்தி சார்ந்த பல துறைகளைப் போலவே சேவைத் துறைகளும் அதிக வேலைவாய்ப்பு தருகின்றன. வங்கி, காப்பீடு, சில்லறை வர்த்தகம், கல்வி என சேவை சார்ந்த பல துறைகளிலும் வேலைவாய்ப்பு பெறுவதற்கு படிப்பு, கல்வித்தகுதியைவிட மனிதர்களைக் கையாளும் திறனே மிக அவசியம்.


✸ மனிதர்களைக் கையாள முதலில் தேவை, தெளிவான பேச்சு. வாடிக்கையாளர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் தெளிவாகப் பேசி தன் கருத்தைப் புரிய வைக்க வேண்டும். பேசுவது போலவே, அக்கறையாகக் கேட்பதும் அவசியம். ஒருவர் பிரச்னையைச் சொன்னாலும், குறை சொன்னாலும், குறுக்கிடாமல் அதைக் கேட்டு தீர்வுகள் தர வேண்டும். யாருக்கும் ஏமாற்றம் தரக்கூடாது.

✸ இதேபோல பிரச்னைகளைத் தீர்க்கும் திறனும் வேண்டும். எந்தப் பிரச்னையைக் கண்டும் ஒதுங்கிப் போகக்கூடாது. 'முடியாது' என்று மறுக்கக்கூடாது. 'எனக்கும் இதற்கும் தொடர்பில்லை' என்று அடுத்தவர்கள் மீது பழி போடக்கூடாது. பிரச்னைகளைத் தீர்ப்பது போலவே, நெருக்கடியான சூழல்களைச் சமாளிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு வாடிக்கையாளர் வந்து கூச்சல் போடுவார். 'தப்பு நடந்துவிட்டது' என்று அவரிடம் மன்னிப்பு கேட்டால், நிறுவனத்தைக் குறை சொல்வது போல ஆகிவிடும். நிறுவனத்தின் பெயரையும் கெடுக்காமல், வாடிக்கையாளரை சமாதானம் செய்ய வேண்டும். இது ஒரு தனித்திறன்.

✸ சேவைத்துறைக்கு முக்கியமாக பொறுமை அவசியம். பல சூழல்களில் காத்திருக்க வேண்டி வரும். யாரோ நீண்ட நேரம் பேசுவதை வேறு வழியின்றி கேட்க வேண்டும். சிலர் அலைய விடுவார்கள். இழுத்த இழுப்புக்குப் போக வேண்டும். இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாடிக்கையாளர்களுடனும், சக ஊழியர்களுடனும் உறவைப் பராமரிக்க வேண்டும்.

எந்தத் துறைக்குப் போனாலும், உங்களின் தனித்திறன்களே உங்களை வெற்றியாளராக மாற்றும்.●

# நீங்கள் தனித்துவமான நபரா?



மரத்திலிருந்து ஆப்பிள் கீழே விழுந்ததைப் பார்த்தே புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார் நியூட்டன். இது எல்லோருக்கும் தெரியும். நியூட்டன் காலத்துக்கு முன்பும் கூட மரங்களிலிருந்து ஆப்பிள்கள் விழுந்து கொண்டுதான் இருந்தன. பல கோடி பேர் அப்படி ஆப்பிள்கள் விழுவதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். ‘மரத்திலிருந்து உதிரும் ஆப்பிள் ஏன் மேலே போகாமல் கீழே விழ வேண்டும்' என்ற கேள்வி அந்த மனிதர்கள் மனதில் எழவில்லை. நியூட்டனுக்கு மட்டுமே அந்த சாதாரண நிகழ்ச்சியைக் கண்டு அசாதாரணமான ஒரு கேள்வியைக் கேட்கத் தோன்றியது.

இப்படி அசாதாரணமாக சிந்திக்கும் தனித்திறன் பெற்றவர்களையே பல நிறுவனங்கள் தேடுகின்றன. அதனால்தான் இன்டர்வியூக்களில், ‘உங்களின் தனித்திறமை எது?’ என்ற கேள்வி இப்போது கட்டாயம் ஆகிவிட்டது.

இந்தக் கேள்வியை நிறுவனங்கள் கேட்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. ஒரு வேலைக்கு போட்டி போடும் பலரும் ஒரே கல்வித்தகுதி மற்றும் அனுபவங்களுடன் இருக்கும்போது, அவர்களில் யாரைத் தேர்வு செய்வது என்ற குழப்பம் ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் இந்தக் கேள்விக்குச் சொல்லும் பதிலை வைத்து, யார் பொருத்தமானவர்கள் என்று அவர்கள் முடிவு செய்ய முடியும்.

இரண்டாவது காரணம், நீங்கள் உங்களை எந்த அளவுக்கு மதிக்கிறீர்கள் என்பதை அறிவது. ‘தொடர்ச்சியாக முன்னேறும் வேட்கை உங்களுக்கு இருக்கிறதா? உங்கள் விண்ணப்பத்தில், ரெஸ்யூமில் குறிப்பிடாத தனித்திறமைகள் உங்களிடம் இருக்கின்றனவா? அவை இந்த வேலையைச் செய்ய உங்களுக்கு எந்த அளவு உதவும்? அந்தத் திறமைகளால் நிறுவனத்துக்கு நன்மை என்ன?’ இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் அவர்கள் பதில் பெற நினைக்கிறார்கள்.

மூன்றாவது காரணம், உங்களின் கிரியேட்டிவ் திறனை அறிவது. படித்து பட்டம் வாங்கிவிட்டு, எங்கோ பார்த்து ரெஸ்யூம் தயாரித்துக்கொண்டு பலரும் இன்டர்வியூக்களுக்கு வருகிறார்கள். அவர்களின் தனித்திறன் என்ன என்பதை அந்தப் பட்டமோ, ரெஸ்யூமோ வெளிப்படுத்துவதில்லை. உங்களுடன் பேசி, உங்கள் திறனை அறிந்துகொள்ள நினைக்கிறார்கள்.

எனவே, ஓர் இன்டர்வியூவில் ‘உங்களின் தனித்திறமை என்ன?’ என்று கேட்கப்படும் கேள்விக்கு சொல்லும் பதிலே உங்களுக்கு வேலை கிடைப்பதை முடிவு செய்கிறது. எனவே, ‘இந்த வேலைக்கு நானே சிறந்த சாய்ஸ்’ என்பதை உங்கள் பதில் மூலம் அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். விண்ணப்பம் செய்திருக்கும் மற்றவர்களின் தகுதிகள் மற்றும்



திறமைகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியாது. ஆகவே, 'மற்ற எல்லோரையும்விட நான் தகுதியானவர்' என்று வாதிடுவது சரியாக இருக்காது. இப்படி ஒப்பீடு செய்வதை எந்த நிறுவனத்திலும் ரசிக்க மாட்டார்கள். உங்கள் பின்னணி, அனுபவம், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் உங்களுக்கு இருக்கும் தனிப்பட்ட அறிவு ஆகியவற்றைக் குறிப்பிட்டே பேச வேண்டும். வெளிப்படையாக, நேர்மையாக இந்த விஷயங்களை விவரித்து, 'இவர் நம் நிறுவனத்துக்கு மிகப்பெரிய சொத்து. இவரைத் தவறவிடக் கூடாது' என்ற எண்ணத்தை இன்டர்வியூ செய்பவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

✸ ஒரு நிறுவனம் தன் வளர்ச்சிக்கு உதவுகிற நபர்களையே வேலைக்கு எடுக்கும். அந்த நிறுவனத்துக்கு லாபம் ஈட்டித் தருகிற தனித்திறன் உங்களிடம் என்ன இருக்கிறது என்பதையே இந்தக் கேள்விக்கான பதிலாக இருக்க வேண்டும்.

✸ அந்தக் குறிப்பிட்ட வேலையில் நிறுவனம் உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை கவனமாகப் பாருங்கள். உதாரணமாக, ஒரு குழுவுடன் இணைந்து செயல்படுவதுதான் உங்கள் வேலை என்றால், எல்லோரையும் இணைத்து வேலை பார்க்க வைக்கும் திறமை உங்களிடம் இருப்பதை விவரியுங்கள். மேனேஜர் வேலை என்றால், தலைமைப்பண்பு இருப்பதைக் காட்டுங்கள். நிதி நிர்வாகம் சார்ந்த வேலை என்றால், சின்னச்சின்ன செலவுகளையும் நுணுக்கமாகப் பார்க்கும் குணம் இருப்பதை உணர்த்துங்கள்.

✸ பழைய வேலையில் நீங்கள் செய்த சாதனைகளையும், அதற்குப் பெற்ற பாராட்டுகளையும் குறிப்பிடுங்கள். உதாரணமாக, உங்கள் வேலை விற்பனைத் துறையில் என்றால், மனக்கசப்புடன் சென்ற வாடிக்கையாளர்களை சமாதானம் செய்து திரும்பவும் நிறுவனத்துக்கு வாடிக்கையாளர் ஆக்கிய சம்பவங்களைக் குறிப்பிடுங்கள்.

✸ உங்களின் ஏதோ ஒரு திறமையை நண்பர்களும் குடும்பத்தினரும் கொண்டாடுவார்கள். அது இந்த வேலைக்கு எப்படி உதவும் என்று பாருங்கள். உதாரணமாக, எப்படிப்பட்ட சூழலிலும் பொறுமையாக இருப்பது உங்கள் குணமாக இருக்கலாம். மார்க்கெட்டிங் சார்ந்த வேலைகளில் பிரச்னையான தருணங்களில் அது எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதை விளக்குங்கள்.

✸ எதையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லுங்கள். நிஜ வாழ்க்கை சம்பவங்களைச் சேர்த்து சுவாரசியப்படுத்துங்கள். அதுதான் மனதைத் தொடும். தேவையான விஷயத்தைத் தாண்டி வேறு எதுவும் பேசாதீர்கள்.

✸ பெருமையாகச் சொல்வதாக நினைத்து எதையும் மிகைப்படுத்தி பொய் சொல்லிவிடாதீர்கள். பல பேரை இன்டர்வியூ செய்த அனுபவத்தில் அவர்கள் உண்மையைக் கண்டுபிடித்துவிடுவார்கள்.

✸ பொருத்தமில்லாத திறமைகளை விவரிக்காதீர்கள். எவ்வளவு உயரமான மலையிலும் ட்ரெக்கிங் செய்து ஏறிவிடும் திறமை, ஒரு சாஃப்ட்வேர் எஞ்சினியர் வேலைக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாதது.

✸ பலரிடமும் இருப்பதாக நீங்கள் நினைக்கும் ஒரு திறமைகூட சமயங்களில் உதவும். உங்களுக்கு நான்கைந்து மொழிகள் பேசத் தெரியும் என்றால், மார்க்கெட்டிங் மற்றும் கஸ்டமர் கேர் வேலைகளுக்கு அது கைகொடுக்கும்.

✸ உங்கள் தனித்திறமையை விவரிக்கும்போது, 'அதனால் நீங்கள் இந்த வேலைக்குத் தகுதியானவர் ஆகிவிடுவீர்களா?' என்று கேள்வி வந்தால், நீங்கள் சரியாக உங்களைப் பற்றிச் சொல்லவில்லை என்று அர்த்தம். 'உங்களின் அந்தத் திறமை இந்த வேலைக்கு எப்படிப் பயன்படும்?' என்று கேள்வி வந்தால், நீங்கள் பொருத்தமில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். எச்சரிக்கை அடைந்து தெளிவாகப் பேச ஆரம்பித்துவிடுங்கள். தனித்திறமையை முழுமையாக வெளிப்படுத்தும் எவருக்கும் வாய்ப்புகள் குவியும். ●

## நம் பார்வையில்..!

அறிமுகம் இல்லாதவர்களின் பார்வையில், நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள். காழ்ப்புணர்வு கொண்டவர்களின் பார்வையில், நாம் கெட்டவர்கள். சுயநலவாதிகளின் பார்வையில், நாம் பேராசைக்காரர்கள். பொறாமைக்காரர்களின் பார்வையில், நாம் திமிர் பிடித்தவர்கள். சந்தர்ப்பவாதிகளின் பார்வையில், நாம் ஏமாளிகள். எதையும் புரிந்து கொள்ளாதவர்கள் பார்வையில், நாம் குழப்பவாதிகள். வெறுக்கும் மனிதர்களின் பார்வையில், நாம் எதற்கும் உதவாதவர்கள்.

நம்மைப் புரிந்து கொண்டோரின் பார்வையில், நாம் அற்புதமானவர்கள். நம்மை நேசிப்பவர்களின் பார்வையில், நாம் அன்பானவர்கள். நம்மை மதிப்பவர்களின் பார்வையில், நாம் மேலானவர்கள்.

நம்மைப் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான பார்வை உண்டு. பிறரின் பார்வையால் உங்களை உலகத்துக்குக் காட்ட சிரமப்படாதீர்கள். உங்கள் பார்வையில் நீங்கள் தனிச் சிறப்பானவராக இருங்கள்.



## கண்டுபிடியுங்கள்!

தனித்திறன் கொண்ட பலர் உங்களைச் சுற்றியும் இருப்பார்கள். உங்கள் வீட்டிலும் இருப்பார்கள். அவர்களின் தனித்திறன் எது என்று கண்டுபிடித்து அவர்களுக்கு நீங்கள் உணர்த்தலாம்.

✷ அவர்களுக்கு எதில் தனித்திறன் இருக்கிறதோ, அதைப் பற்றி அவர்களிடம் பேசும்போது கண்கள் ஒளிரும். ஒருவித பரவச உணர்வுடன் அதைப் பற்றிக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். வானத்தில் பறப்பது போல உணர்வார்கள்.

✷ வாயைத் திறந்தால் அதைப் பற்றியே ஓயாமல் பேசிக்கொண்டு இருப்பார்கள். நீங்கள் எங்கும் படிக்காத, கேள்விப்படாத பல தகவல்களை அவர்கள் விவரிப்பார்கள். அந்த அளவுக்கு அதில் ஆர்வம் இருக்கும். அதைத் தாண்டி மற்ற விஷயங்கள் பற்றி அவர்களுக்குப் பேசத் தெரியாது.

✷ குறிப்பிட்ட அந்த விஷயம் பற்றி மிக வேகமாகக் கற்றுக்கொள்வார்கள்.




## தனித்துவ வீரன்!

ஒரு வகுப்பில் ஆசிரியர் எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் சொல்லித் தருகிறார். ஆனால், ஒருவர் முதல் மதிப்பெண் எடுக்கிறார்; இன்னொருவர் கடைசி மதிப்பெண் எடுக்கிறார். எப்படி? மகாபாரத்தில் துரோணர் எல்லோருக்கும் ஆசான். பாண்டவர்கள், கௌரவர்கள் அனைவரும் அவரிடம்தான் பாடம் பயின்றனர். ஆனால், அர்ஜுனனுக்கு நிகராக எவரும் உயரவில்லை. பண்பிலும் கூட. அர்ஜுனன் பலரோடு சேர்ந்து பாடம் கற்றான். ஆனால் எல்லோரைப் போலவும் பயிற்சி செய்யவில்லை. அவன் பயிற்சி வேறு விதமாக இருந்தது. பிறருடன் தன்னை ஒப்பிட்டுப் பயிற்சி செய்யவில்லை. தன் தனித்திறமையால் அதை மிகச் சிறப்பாக மாற்றினான். அதனால்தான் ‘வில்லுக்கு விஜயன்’ ஆனான்.

தனித்திறமையே ஒருவரை கூட்டத்திலிருந்து வித்தியாசப்படுத்துகிறது.






## அறிந்தும் அறியாமலும்!

நம் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விஷயத்தில் தனித்திறன் இருக்கிறது. ஆனால், வாழ்க்கையே போராட்டமாக இருப்பதாலும், ஊக்கப்படுத்த யாரும் இல்லாததாலும், மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தன்னைத் தாழ்வாக நினைப்பதாலும், நிறைய பேர் தங்கள் திறமையை அறிவதில்லை.


அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கும் மற்றவர்கள் சற்றே அதிக திறமையுடன் இருக்கலாம்; நீண்ட காலம் அதற்காக உழைத்திருக்கலாம். அதனால் அவர்கள் ஏதோ சாதித்திருக்கலாம். ஒப்பிடுவதைத் தவிர்த்துவிட்டு முயற்சியில் இறங்குவதே வழி.





## நிராகரித்தாலும் சாதனை!

தனித்திறன் உள்ளவர்கள் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்வார்கள். பிறர் நிராகரித்தாலும் உறுதியாக இருந்து சாதிப்பார்கள். உலகின் மிகச்சிறந்த கூடைப்பந்து வீரராகக் கருதப்படுபவர் மைக்கேல் ஜோர்டான். ஆனால், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது 'உனக்குக் கூடைப்பந்து விளையாட்டு சரிவராது' என்று சொல்லி அவரைப் பள்ளி அணியிலிருந்து நீக்கிவிட்டார்கள். பிற்காலத்தில் அமெரிக்காவின் புகழ்பெற்ற வீரராக தன் தனித்திறமையால் மாறினார் அவர்.



## தனித்திறன் பரிசு!

அற்புதமான தனித்திறமை ஒன்றைப் பரிசாகப் பெற்றவர்கள், தங்களிடம் அப்படி ஒரு திறமை இருப்பதாகச் சொல்லிக்கொண்டே இருக்க மாட்டார்கள். அவர்கள் எப்போதும் அதைப் பற்றிய சிந்தனையில் இருப்பார்கள். தங்கள் திறமையை வீணடிக்காமல் ஏதாவது சாதனையைச் செய்துவிட வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இருக்கும். தனித்திறமையுடன் தாங்கள் செய்யும் வேலைகளை வைத்தே இந்த உலகம் தங்களை மதிப்பிடும் என்பதே அவர்களின் நினைப்பாக இருக்கும். அதையே தங்கள் வாழ்நாள் கடமையாகக் கருதுவார்கள்.

உலகின் மிகச்சிறந்த விஞ்ஞானியாக ஐன்ஸ்டீன் மதிக்கப்படுகிறார். அவரைவிட திறமையான இயற்பியல் அறிஞர்கள் அவர் காலத்திலேயே வாழ்ந்தார்கள். ஆனாலும் தன் திறனை முழுமையாகப் பயன்படுத்தியதால் ஐன்ஸ்டீன் முன்னணிக்கு வந்தார். பீத்தோவான் போன்ற பலருடன் ஒப்பிடும்போது மொஸார்ட் பெரிய இசைமேதை கிடையாது. ஆனால், மொஸார்ட்டே உலகப்புகழ் பெற்றார். தனித்திறனை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே சாதனைகள் நிகழும். ●

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.

**போன்:**
**0421–4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**

## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை



(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | ~~ரூ.380~~ ரூ.250 மட்டும். |

## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை



(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)


| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | ~~ரூ.380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Inners for Winners
RAMRAJ
BANIANS
RAMRAJ
www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2019-21. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-8-2021. Posted at Tirupur BPC on 5th of every month.

